பாபு தையல் இயந்திரம்
திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி
நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 423



## போலித் துவாரகாவை அம்பலப்படுத்திய நாடு கடந்த தமிழீழ அரசு




## தமிழரசுக் கட்சி இப்போது முக்கியமான ஒரு திருப்புமுனையில் நிற்கிறது



## இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது

# போலித் துவாரகாவை அம்பலப்படுத்திய நாடு கடந்த தமிழீழ அரசு







துவாரகா என அடையாளப் படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வீடியோ முழுமையாக செயற்கை நுண்ணறிவினால் தயாரிக்கப்பட்டது என அநேகர் நம்புகிறார்கள். அதிலிருந்தே அனைவரும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர் போல உள்ளது. அது இந்த வீடியோவை உருவாக்கியோருக்கு கிடைத்த வெற்றிதான்.

காரணம் வெளியாகியுள்ள வீடியோவில் உள்ள நபர் சுவிசில் வாழும் பெண் என்பது அநேகருக்கு தெரியும். அவர் குறித்த விபரங்கள் மற்றும் படங்கள் ஏற்கனவே வந்து விட்டன. முக்காடு போட்டுக் கொண்டு போய் துவாரகா சிலரைச் சந்தித்தார் எனும் பேச்சு வந்த போதே அவர் குறித்த அனைத்து தகவல்களும் சமூக வலைத் தளங்களில் வெளியாகி. அவை இன்றும் உள்ளன.

எனவே உண்மையான துவாரகா போல ஒருவரை AI தொழில்நுட்பம் மூலம் உருவாக்க வேண்டிய தேவையில்லை. அது ஒரு புறத்தே பண விரயம்.

அடுத்து ஏற்கனவே சுவிற்சர்லாந்தின் துர்காவ் (Thurgau) மாநிலத்தில் வாழும் மித்துஜா என அவர் குறித்த விபரங்கள் பரவலாக தெரிய வந்து சில காலம் ஆகிவிட்டது. அவரது தொலைபேசி உரையாடல் குரல் கூட பல சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு விட்டன.

இந்த நிலையில் வேறொருவரையோ அல்லது வேறொருவரது குரலையோ பயன் படுத்தினால், மித்துஜாவை, துவாரகா எனக் காட்டியவர்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் போகலாம்.

எனவே வெளியாகியுள்ள வீடியோ AI தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படவில்லை. ஆனால் Green Screen Background அல்லது Chromakey தொழில்நுட்பத்தை பாவித்தே துவாரகா வீடியோ உருவாக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக அந்த வீடியோவை அவதானித்தால் மித்துஜா நிறுத்தி, நிறுத்தி பேசுவதை அவதானிக்க முடியும். கமரா ஒரே இடத்தில் இருக்கிறது. ஆனால் அநேகமுறைகள் Jump ஆவதோடு, ஒரே இடத்தில் நிற்காமல் சற்று விலகி விலகி நிற்கிறார். அந்த வீடியோவை பாருங்கள். அதை பார்த்து முடிவெடுங்கள்.

அதனால்தான் அது AI தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படவில்லை என முடிவு செய்ய இலகுவாகிறது. AI தொழில்நுட்பத்தால் உருவாக்கினால் இந்த தவறை அதை உருவாக்குவோர் விட மாட்டார்கள்.

செயற்கை நுண்ணறிவினால் தயாரிக்கப்பட்டது என்றால் வீடியோவில் பேசும் சம்பந்தப்பட்டவரை தேட மாட்டார்கள். அவருக்கு பிரச்சினையும் வராது. இது சிலருக்கு பரப்பும் கதை. ஆனால் அவர்தான் பேசினார் என நம்புவோருக்கு சொல்ல நினைத்தது வேறு கதை.

இன்னொன்று இலங்கையில் மாநிலங்கள் முறை இல்லை. மாகாண முறையே உள்ளது. ஆனால் அவரது பேச்சில் மாநிலங்கள் என அவர் சொல்கிறார். எனவே அவரது பேச்சை, தமிழகத்தில் அல்லது இந்தியாவில் உள்ள ஒருவரே எழுதிக் கொடுத்துள்ளார். அதை இந்த குழுவினர் கூட அவசரத்தில் அவதானிக்காமல் விட்டு விட்டார்கள்.

பொதுவாக அவரது பேச்சை, ஆரம்ப காலங்களில் அன்டன் பாலசிங்கம் அவர்களே எழுதிக் கொடுத்தார். அதன் பின் எழுதிய பேச்சு பாலக்குமார் அவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்டது. பாலசிங்கம் அவர்களது எழுத்துக்களில் இருந்த வீரியம், பாலக்குமார் அவர்களது எழுத்தில் இருக்கவில்லை.

புதிய வீடியோவில் இந்திய – தமிழக ஆதரவாளர்களது பேச்சிலும் எழுத்திலும் வரும் வார்த்தை பிரயோகங்களே உள்ளன. அவர்களது பரப்புரை என்பதை யாரும் தவறு சொல்ல முடியாது. ஆனால் ஈழ தலைவர்களது பேச்சில் அவர்களது எண்ணக் கருத்துகள் வந்தால், அங்கே உள்ள இடைவெளியை அனைவரும் உணருவார்கள். அதை இங்கே உணர முடிகிறது.

அடுத்து சிலர் டப் (யாரோ குரல் கொடுத்துள்ளார்கள்) பண்ணியது சரியில்லை என எழுதியிருந்தார்கள். குரல் வாயசைப்புக்கு ஏற்ற விதத்தில் சிங் ஆகவில்லை (பொருந்தவில்லை) என்பது உண்மைதான். அதற்கு காரணமே பலமுறை நிறுத்தி நிறுத்தி மித்துஜா பேசியதால், அதை எடிட்டிங்கில் கோர்க்கும் அல்லது இணைக்கும் போது, ஒலியை சரியாக சிங் பண்ணாமல் அலட்சியமாக இருந்துள்ளார்கள்.

ஆனால் அதில் உள்ளது மித்துஜாவின் குரல்தானே தவிர வேறு யாரும் டபிங் கொடுக்கவில்லை.

இப்படியான அநேக குளறுபடிகளால், அநேகரது எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான காணொளி (வீடியோ) நகைப்புக்கு இலக்காகிவிட்டது.

இதேவேளை, துவாரகா பெயரில் வெளி வந்த காணொளியை நிராகரிக்கிறோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழீழத் தேசிய மாவீரர் நாளில், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களது புதல்வி துவாரகாவின் பெயரில் வெளிவந்த காணொளியினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது.

கிடைக்கப்பெற்ற உறுதியான தகவல்கள், தரவுகளின் அடிப்படையிலும், எமது அவதானங்களின் வழி நின்றும் இம் முடிவினை நாம் எடுத்துள்ளோம்.

தமிழீழத் தேசியத் தலைவரையும், அவரது குடும்பத்தினரையும் உலகத் தமிழ் மக்கள் தங்கள் இதயங்களில் அன்போடும், மதிப்போடும் வைத்திருக்கின்றார்கள். எனவே தான் அவரது மகளாக வேறு ஒருவரை முன்வைப்பது எங்கள் உள்ளங்களில் பெரும் வேதனையை ஏற்படுத்துகின்றது.

பொதுவெளியிலும், பொதுத் தளத்திலும் தமிழ் மக்கள் இவ்விடயத்தினை நிராகரித் திருந்தமை நம்பிக்கையினை தந்துள்ளதோடு, தகுந்த பதிலடி யாகவும் அமைந்துள்ளது.

இதேவேளை இவ் விவகாரத்தினை பேசுபொருளாக கொண்டு கையாளுகின்ற சமூக ஊடகங்களை பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறும் வேண்டு கின்றோம்.

“விழிப்பே அரசியலின் முதற்படி“ என்ற தமிழீழத் தேசியத் தலைவரது வாக்கை நாம் அனைவரும் நினைவிருத்தி, தொடர்ந்தும் விழிப்புடன் செயற்படுவோம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தேர்தலும். குழப்பத்தில் தமிழ் அரசியற் கட்சிகளும்

அடுத்த வருடத்தில் நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தெரிவித்திருக்கின்ற சூழலில், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு குழப்பத்துடன் காணப்படுகின்றது. அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்பது உறுதி. நீண்டகால இழுபறியில் இருக்கும் மாகாண சபைகளுக்கானத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தல் நடைபெறுவதில் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது.

எனினும் வரவிருக்கும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்க தமிழ்த் தரப்பின் கட்சிகள் தயாரா என்றால், பதில் இல்லை. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துண்டு துண்டாக உடைந்து, ஆளுக்கொரு கட்சிகளை உருவாக்கிவைத்துக் கொண்டுள்ள நிலையில், யாருக்கு யார் ஆதரவு என்பது மர்மமாகவே இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு யார் அடுத்த தலைவர் என்கிற போட்டி இன்னமும் முடிவுக்கு வரவில்லை. புளொட் மற்றும் ரெலோ தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியுடன் தான் பயணிக்கப்போகிறார்களா அல்லது இனிவரும் தேர்தலில் தனித்து இயங்கப்போகிறார்களா, ஏனைய கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைக்கப்போகிறார்களா என்கிற குழப்பங்கள் தொடர்கின்றது.

ஏற்கனவே சில நபர்களின் பெயர்கள் ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர்கள் என அடிபட ஆரம்பித்துள்ள சூழலில், தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கையின் எந்த வேட்பாளருக்கு ஆதரவினை வழங்கப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் நம்பி ஏமாற்றமடைந்துள்ள தமிழ்த் தரப்பினர். சஜித் தலைமையை ஏற்பார்களா? அல்லது மாற்று சிங்களவர் ஒருவரை ஏற்பார்களா? என்கிற கேள்விகளுக்கான பதிலைக் கணிப்பதில் சிரமம் உள்ளது.

தமிழினம் சார்பில் இந்தமுறை பொதுவான ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தி, தேர்தலில் களமிறங்குவது என்கிற தீர்மானம் ஒன்றிற்காக கட்சிகளுக்குள் நீண்ட கலந்துரையாடல்கள் நடப்பதாக அறிய முடிகிறது. இதனது உண்மைத்தன்மை இனிவரும் காலங்களில் வெளிச்சத்துக்கு வரும்.

அரச கைக்கூலிகளாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வழமைபோல இன்றைய ஆட்சியாளரை ஆதரிப்பார்கள் என்று சரியாகக் கூற முடியாதுள்ளது. தெற்கிலும் பல குழறுபடிகள் நீள்கிறது. சிதறிக்கிடக்கும் தமிழ்க் கட்சிகள் ஒழுங்கான எந்தவிதத் தீர்மானத்தையும் மக்கள் சார்ந்து எடுக்கவியலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்களைக் கடக்கின்றபோதிலும் தலைமைக்கான வெற்றிடம் அப்படியே இருக்கிறது. தமிழ் மக்களுக்கானப் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கிறதே தவிர, தீர்வுகள் எட்டப்படவுமில்லை. அரச கொள்கையில் மாற்றங்கள் ஏற்படவுமில்லை. வரப்போகின்ற பாராளுமன்றத் தேர்தலில், எங்களுக்கு வாக்களியுங்கள் என, எந்த முகத்துடன் தமிழ் மக்கள் முன், தமிழர் பிரதேசங்களுக்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் வரப்போகிறார்கள் என்பது தெரியவில்லை.

# கல்லறைப் பூக்கள்

23



**பல்துறை எழுத்தாளர்**
**புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்**

"தம்பி சாத் நீங்க காசை வைங்க. அது உங்களுக்குத் தேவைப்படும். டேய் சதிஸ் போயிட்டு மூன்று றாத்தல் பாண் வாங்கிக் கொண்டுவா. நானும் சாத்தும் இந்த இடத்தில் நிக்கிறம்"

வெதுப்பகம் இடப்பக்க கரையிலிருந்து வலப்பக்க கரைக்கு வீதியைக் கடந்த செல்ல வேண்டும். அவ்வளவு நெரிசலைக் கொண்ட வீதி அது. யூஜீனும் சதிஸ்சும் வில்லூன்றி கந்தசாமி கோயில் வாயிலைக் கண்டதும் பாதணிகளைக் கழற்றி வீதியின் ஓரத்தில் வைத்துவிட்டு, பாதங்களைச் சாட்டுக்கு நீரில் நனைத்துக்கொண்டு, முருகனை வணங்கினார்கள். 'ஓ.எல்'லுக்குப் பின்பு கடவுள் நம்பிக்கை அற்றுப் போன சாத், அவர்கள் இருவரும் கடவுளை வணங்கும் போது, தூரத்தே தெரியும் சவுக்கு மரத்தில் தனிமையில் அமர்ந்திருக்கும் மணிப்புறாவைப் பார்த்து வேதனைப்பட்டான்.

"தம்பி எழும்புங்கோ விடிய வேளைக்குப் போனீங்கள் என்றால், சனம் இல்லாமல் இருக்கும். 'டிக்கட் போர்மை' எடுத்து உடனே நிரப்பிக் கொடுக்கலாம்." – தந்தையைப் போல சாத்தின் அறையைத் தட்டினார். சாத்க்கு அந்த வீட்டின் நடுப்பகுதியில் தனியாக ஒரு 'ரூம்' கொடுக்கப்பட்டது. இப்படி ஓர் இடம் தனக்குக் கிடைக்கும் என்று அவன் பேருந்தில் ஏறும்போதும் கூட யோசிக்கவில்லை. யாழ்ப்பாண ஆசிரியர் பொது வைத்தியசாலையில் – சாத்தின் தாய் தலைப் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டபோது – தாயின் கருவில் இருக்கும் போதும், உலகத்திற்கு வந்து இருபது நாட்கள் மட்டுமே கட்டிலில் முதல் முதன் உறங்கிய உறக்கத்தின் சுகத்தை பதினெட்டு வருடங்களுக்குப் பின்னர் முதற் தடவையாக கட்டிலில் சுகமாக உறக்கமும் பயணக்களைப்பும் சற்று காலம் பொழுதைக் குடித்து விட்டது.

காலை பிரம்ம முகூர்த்த நேரம் முடிய இருபது நிமிடங்கள் மட்டுமே இருந்தன. யூஜீனின் தந்தையார் கந்தசாமியார் கதவைத் தட்டும் சப்தம் கேட்டதும் சாத் ஆரம்பத்தில் சிறிது சினத்துக்கொண்டாலும் தான் இருக்கும் இடத்தை எண்ணி தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "ஓம் 'அங்கிள்' இந்தா வந்திட்டன்" என்றவாறு எழுந்து படுக்கைக் கட்டில் கடமைகளை முடித்துக்கொண்டு, வெளியில் வந்தான்.



"குட்மொனிங்' அங்கிள்"

அதிகாலை வேளையில் கிணற்றடியில் உரையாடுவதற்கு ஒருவர் கிடைத்தால், போதும் கந்தசாமியருக்கு. தான் படித்த காலத்து ஆங்கிலம், சிங்களம், தாய்மொழி எல்லாம் கலந்து புதிய மொழி பிறக்கும். இன்று சாத் இந்த வரலாறு தெரியாமல் ஆங்கிலத்தில் காலை வணக்கம் சொல்லி மாட்டிக் கொண்டான்.

" 'குட்மொனிங்' son"

"You are university Medical Student"

"Yes"

"I am very happy to have meet you"

"Thank you for your kindness."

தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் ஓரளவுக்கு கதைத்து சமாளித்துக் கொண்டிருக்கும் போது, சாத்தைக் காப்பாற்ற வந்தவர் போல, கந்தசாமி 'அங்கிளி'ன் மூத்த மகன் குறுக்கிட்டு,

"அப்பா கெதிய முகத்தைக் கழுவிப்போட்டு வாங்கோ, தேத்தண்ணி ஊற்றி ஆறுது" என்று மகனின் குரலைக் கேட்டதும் 'அங்கிளி'ன் பற்தூரிகை விரைவாக தொழிற்பட்டது.

"என்ன தம்பி பல்பொடியால், விரல்ல பல் தீட்டுறாய்?. ஒரு 'பிறஸ்' வாங்களாந்தானே?"

"அது அங்கிள் எங்கட ஊர்ப் பழக்கம் பழகிப் போச்சு"

"It is Raining. Come in soon"

"இந்தா முகத்தைக் கழுவிப்போட்டு வாறன்"

"கெதியா வா... Come soon"

யூஜீன், சதிஸ், அவர்களுடைய பெற்றோர், எல்லோரும் விருந்தினர் 'ஹோலில்' ஆசனங்களில் அமர்ந்தவாறு புதிதாக வந்துள்ள சாத்துடன், மாறிமாறி நேர்காணலில் ஈடுபட்டனர். மூன்றவது மகள் கார்த்திகா, சில்வர் தட்டில் எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்து, 'ஸ்டூலில்' தட்டத்துடன், வைக்கும்போது, சாத்தை ஜாடக்கண்ணால், பார்த்து உதடுகளுக்குள் புன்னகித்தாள். சாத்தும் பதிலுக்கு மௌன புன்னகை புரிந்தான். அவளது புன்னகையினால், சாத்துக்கு காதல் மலரவுமில்லை அவள் மீது பரிதாபம் படவுமில்லை தவறாகவும் எண்ணவில்லை அவளைப் பேதையாகவும் கருதவில்லை. அவளை ஏதோ போராட்டத்தில் சிக்கிக்கொண்டு வாடும் மலராகவே எண்ணினான். சாத் ஊகித்தது உண்மைதானா?. அது உண்மையாக இருந்தால், அவனால், அவளுக்கு உதவ முடியுமா?. அவளுக்கு ஆலோசனை வழங்குவானா?. அல்லது இது எல்லாம் எனக்கு வேண்டாத வம்பு என சாத் ஒதுங்கி நடப்பானா?. தொடர்ந்து புதினத்தில் பார்ப்போம்.

"இரண்டு மகளும் 'Arts' படிக்குதுகள்" தாய் விசாலாட்சியின் குரல் சாத்தை நோக்கி ஒலித்தது.

"என்ன, என்ன பாடங்கள்?"

"கார்த்தி, (மகளைச் செல்லமாக அழைக்கும் வீட்டுப் பெயர்) தமிழும் புவியியலும் பரத நாட்டியமும் இந்த வருஷம் பரீட்சை எடுக்கப்போகுது. சின்னவள் மேனு தமிழும் புவியியலும் கர்நாடக சங்கீதமும் அடுத்த வருஷம் பரீட்சை எடுக்க வேணும்"

"கலைக் குடும்பந்தான்"

"இந்த காலத்தில் படிக்காம ஒன்றும் செய்ய முடியாது. பாருங்க இரண்டு பொடியன்களும் படிக்கிற வயசில படிக்காம இப்ப ஒரு வேலை எடுக்கப்படுகிற பாடு. இதுகளுக்கு Arts Faculty இல்லாட்டி, Fine Arts ஆவது கிடைக்குந்தானே"

" 'குட் ஐடியா' "

"காலை சாப்படு 'ரெடி'. எல்லோரும் சாப்பிட வாங்கோ"

சாத்தின் முகராசியோ கற்ற கல்வியின் மகிமையோ தத்துவார்த்த பேச்சின் மகிமையோ சொந்த கதையின் சோகமோ ஏதோவொன்று ஓரிரு நாட்களில் கந்தசாமி குடும்பத்தில் ஒருவனாக மணியும் ஒளியும் போல ஐக்கியப்பட வைத்துவிட்டது.

"அப்பா, இண்டைக்குமட்டக்களப்புக்கு 'அயர்' க்கு போகிறார். நீங்க போய் சாப்பிடுங்கோ. சாத் நீங்களும் வேலைக்குப் போனால்தான், 'டோக்கன்' எடுக்கலாம். ஒரு நாளைக்கு நூறு 'டோக்கன்'தான் கொடுப்பாங்கள் போல. (கப்பல் டிக்கட் எடுக்க முன்கூட்டிய பதிவுத்துண்டு) நானும் தம்பியும் அம்மாவும் தங்கச்சிகளும் (பாடசாலை விடுகைத்தினம்) வீட்டிலதானே. ஆறுதலாக சாப்பிடுவம்." என்றவாறு யூஜீன் தொலைக்காட்சிப்பெட்டியை மூடியிருந்த திரைசீலையை நீங்கிவிட்டு, கையில் 'றிமோல்ட் கொன்றோலோடு' அமர்கின்றான்.

முன் அறையில் இருந்து, சப்தஸ்வரங்களின் ஒலி, இனிமையான சுருதியுடன், பூவில் இருந்து மணம் வீசுவது போலவும் பூவாகிய அவள் தனது இங்கிதமான 'கமகம' நறுமணத்தை வீட்டுக்கு புதிய விருந்தாளியாக வந்திருக்கும் சாத்தின் மீது ஸ்பரிசம் பண்ண வைத்து, அவனது முகத்தை மலர வைப்பது போலவும் தான் வாடுவது போலவும் மனையெங்கும் மங்கல கீதமாக அருணகிரிநாதரின், 'கைத்தல நிறைகனி அப்பமுடனவல்...' என்ற திருப்புகழ் அழகுக்கு அழகு செய்வது போலவும் ஒலிக்கின்றது.

பாடலின் ஒலியைக் கேட்டு கணப்பொழுது மது உண்ட குரங்கின் புத்தி போல சாத் தடுமாறினான். இருந்தும் தனக்குள் அடிக்கடி தானே உருவாக்கிக் கூறிக்கொள்ளும் தத்துவத்தை எண்ணி தன்னை ஒரு நிலைப்படுத்திக்கொண்டான்.

திருக்கோணமலையின் மாவட்டச் செயலகம், எழில் கொஞ்சு விளையாடும் திருக்கோணமலை இயற்கைத் துறைமுகத்தின் அருகில் செல்லும் கடற்கரை வீதியின் மேற்பகுதியில் சனக் கூட்டத்துடன் காணப்பட்டது.

மாவட்டச் செயலகத்திகன் வலப்பக்கத்தில் நிலாவரைக்குச் செல்லும் பிரதான வீதியும் காட்சியளித்தது. மாவட்டச் செயலகத் திலிருந்து கடலின் பக்கமாக பார்வை யைத் திருப்பினால், இயற்கைத் துறைமுகத்தில் வெளிநாட்டுச் சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நிற்கும் காட்சி கண்களைப் பறிக்கும். கண்களுக்கு எட்டிய தூரத்தில் எழில் சிந்தும் மூதூர் நகரில் இருந்து திருக்கோணமலை நகருக்குள் வரும் சிறிய வகை கப்பல்களின் காட்சிகள் கண்களுக்குக் குளிர்ச்சி. உப்புக் காற்று மேனியை வருடிச் செல்லும்.

தொடரும்...

# தமிழரசுக் கட்சி இப்போது முக்கியமான ஒரு திருப்புமுனையில் நிற்கிறது



கட்சியின் தேசிய மாநாடு ஜனவரியில் நடைபெறப்போகின்றது. மாவைதான் தலைமைப் பதவியைத் தொடரப் போகின்றாரா அல்லது தலைவர் பதவிக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்படுமா என்ற கேள்வியுடன்தான் இந்த மாநாட்டை அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள். பழைய தலைமைகள் மீதான அதிருப்திதான் இதற்கு காரணம். இதேவேளையில், சம்பந்தனின் திருகோணமலை மாவட்ட எம். பி பதவி இப்போது சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்த இரண்டும் தமிழர் அரசியலுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான விடயங்களாக இருப்பதால் அவற்றில் சம்பந்தன் விவகாரத்தை இந்த வாரம் பார்ப்போம்.

சம்பந்தனிடம் இப்போதிருப்பது எம்.பி பதவி ஒன்றுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி, கூட்டமைப்பில் இருந்த பங்காளிக் கட்சிகள் தனியாகச் சென்றதால் இல்லாமல் போய்விட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி மாவை சேனாதிராஜாவிடம் போய்விட்டது. தமிழரசுத் தலைமைப் பதவியை சேனாதியிடம் கொடுக்கும் போது, கூட்டமைப்பின் தலைமைப் பதவி தன்னிடம் இருப்பதாக அவர் திருப்திப்பட்டுக்கொண்டார். இப்போது தலைமைப் பதவிகள் எதுவும் இல்லாத போதிலும், அவரது அனுபவம், ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் "பெருந் தலைவர்" என அவர் ஆதரவாளர்களால் போற்றப்படுகின்றார். அந்த பெருந்தலைவரின் அரசியல் "முதிர்ச்சியை" இப்போது கேலிக் குரியதாக்கியிருக்கின்றார் சுமந்திரன்.

**சுமந்திரன் குற்றச்சாட்டு**

"பெருந்தலைவரை" நோக்கி கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இப்போது சுட்டுவிரலை நீட்டி குற்றச்சாட்டை முன்வைத்தமைதான் தமிழ் அரசியல் களத்தில் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. கட்சிக்குள் சுமந்திரனுக்கு சார்பாகவும், எதிராகவும் கருத்துக்கள் எதிரொலிக்கின்றன. இந்தப் பின்னணியில் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை எதிரொலித்திருக்கின்றது. வவுனியாவில் இடம்பெற்ற மத்திய குழுவின் கூட்டத்தின் போது, சம்பந்தன் பதவி விலகவேண்டும் என சுமந்திரன் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்து தொடர்பில் அவர் விளக்கமளிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தலைவர் அனுமதி வழங்கினால் அதற்கான பதிலைத் தருவதற்கு தான் தயாராக இருப்பதாக சுமந்திரன் தெரிவித்தார். கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய மாவை சேனாதிராஜாவும், பதிலளிக்குமாறு சுமந்திரனிடம் தெரிவித்தார். 2020 தேர்தலுக்கு முன்னர் தேர்தல் அரசியலிலிருந்து ஒதுங்கும் முடிவை திருமலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சம்பந்தன் அறிவித்தார். ஆனால், திருமலை மக்கள் அதனை ஏற்கவில்லை. அதனால், தனது முடிவை சம்பந்தன் மீள்பரிசீலனை செய்தார். அதன்போது அவர் இரண்டு நிபந்தனைகளை விதித்தார். ஒன்று கட்சியின் முதலாவது தேசியப் பட்டியல் உறுப்புரிமையை குகதாசனுக்கு வழங்குவதெனவும், இரண்டாவதாக ஒரு வருடத்துக்கு மட்டுமே தான் பதவியிலிருப்பேன் என்பதும்தான் அவரது நிபந்தனை.

**நிறைவேறாத நிபந்தனைகள்**

2022இல் நடைபெற்ற மத்திய செயற்குழுக்கூட்டத்தில் சம்பந்தனின் நிபந்தனைகள் குறித்து ஆராயப் பட்டது. ஒரு வருடமாகியும் அவர் பதவி துறக்காதது தொடர்பில் அவருக்கு நினைவுபடுத்துவது என ஒரு குழுவை சம்பந்தனிடம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. மாவையும், சுமந்திரனும் இந்தக் குழுவில் இருந்தார்கள். இவர்கள் திருமலை சென்று சம்பந்தனுடன் பேசிய போது அவர் பதவியைத் துறக்க மறுத்தார். தமது நிலையைத் தெரிந்துதான் மக்கள் தனக்கு வாக்களித்தார்கள் என சம்மந்தன் தனது நிலைப்பாட்டை அப்போது நியாயப்படுத்தினார்.
இந்த நிலையில்தான் நியுஸ் பெஸ்ட் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கருத்து கேட்டபோது, சம்பந்தன் பதவி துறக்க வேண்டும் என்ற கருத்தை சுமந்திரன் முன்வைத்தார்.

தமிழரசுக் கட்சி மத்திய குழுவில் சுமந்திரன் தெரிவித்த மற்றொரு கருத்தும் மிகவும் முக்கியமானது என்பதால் அதனையும் இங்கு தருகிறோம். "சம்பந்தன் ஐயா தனது நற்பெயரைப் பாதுகாப்பதாக இருந்தால், பதவியிலிருந்து விலகுவதோடு அவர் கொழும்பில் வசிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொந்தமான வீட்டை மீண்டும் கையளிக்க வேண்டும். அத்துடன் சம்பந்தன் பதவி விலகுவதானது, பாராளுமன்ற மற்றும் தேசிய மட்ட செயற்பாடுகளுக்கும், திருமலை மாவட்டத்துக்கும் நன்மையே கிடைத்திருக்கும்" என்று சுமந்திரன் தெரிவித்தார்.

**சம்பந்தன் அதிருப்தி**

சுமந்திரன் என்னதான் விளக்கம் கொடுத்தாலும் இதற்குப் பின்னால் ஒரு அரசியல் நகர்வு உள்ளது. சுமந்திரன் தனியோட்டம் ஓடுகிறார் என்ற அதிருப்தியை தனக்கு நெருக்கமான சிலரிடம் சம்பந்தன் அண்மைக்காலத்தில் தெரிவித்திருந்தார். தன்னிடம் கலந்தாலோசிக்காமலேயே சில விடயங்களை சுமந்திரன் செய்திருப்பது சம்பந்தனுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழரசின் அடுத்த தலைமைப் பதவியில் கண்வைத்து செயற்பட்ட சுமந்திரன், குகதாசனுடன் ஏற்படுத்தியிருந்த நெருக்கமும் சம்பந்தனை குழப்பியது.

பொதுத் தேர்தலின் போது திருமலைமாவட்டத்தில் சம்பந்தனுக்கு அடுத்ததாக வந்திருந்த குகதாசனுடன் நெருங்கிச் செயற்படுகின்றார் என்பது சம்பந்தனுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியமைக்கு காரணம் உள்ளது. சம்பந்தன் பதவி துறந்தால் அந்த இடத்துக்கு வரவேண்டியவர் குகதாசன்தான். ஒரு வருடத்தில் அந்த பதவியைத் தருவதாக சம்பந்தன் வேறு வாக்களித்திருந்தார். அதனைவிட, தேசியப் பட்டியலில் முதலாம் இடத்தை தந்து மற்றொருவருக்கு அதனைக் கொடுத்ததும் குகதாசனுக்கு சம்பந்தன் மீது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. சம்பந்தனை நேரில் சந்தித்து இவை தொடர்பாக குகதாசன் கேள்வியும் எழுப்பியிருந்தார்.

**சூதாட்டத்தில் குகதாசன்**

இந்த இடத்தில் குகதாசன் குறித்த ஒரு சிறிய அறிமுகம். சென்னையில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் பணியாற்றிய குகதாசன், பின்னர் கனடாவுக்கு குடிபெயர்ந்து அந்நாட்டு பிரஜாவுரிமையை பெற்றவர். தமிழரசுக் கட்சிக்கும், திருமலை மாவட்ட தமிழர்களுக்காகவும் பெருமளவு நிதியைச் செலவிட்டவர். கடந்த பொதுத் தேர்தலில் குகதாசனை களமிறக்கிவிட்டு தான் ஒதுங்கப்போவதாகவே சம்பந்தன் முதலில் தெரிவித்து வந்தார்.

இதனை நம்பி கனடா பிரஜாவுரிமையையும் குகதாசன் துறந்தார். ஆனால், தேர்தலுக்காக குகதாசன் பெருமளவு தொகையைச் செலவிடுவார் என்ற நம்பிக்கையில் தான், மக்கள் கேட்பதால், தானும் போட்டியிடப்போவதாக பின்னர் சம்பந்தன் அறிவித்தார். இதன்போது குகதாசனைச் சமாளிக்கத்தான் இரு நிபந்தனைகள் என்ற நாடகத்தை அரங்கேற்றினார்.

சம்பந்தனை வெட்டிவிட்டு திருமலையின் எம்.பியாக குகதாசனைக் கொண்டுவந்தால் தமது தலைமைக்கான கனவு சாத்தியமாகும் என்பது சுமந்திரனின் கணிப்பு. தமிழரசுத் தலைமைக்காக தனக்கு சவால்விட முற்படும் சிறிதரனுக்கு கிளிநொச்சியில் மட்டும்தான் ஆதரவுள்ளது. ஆனால், தமிழரசுக்கு தலைமைதாங்க வேண்டுமானால், வடக்கு - கிழக்கில் ஆதரவு இருக்க வேண்டும். முதலில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரம் அவசியம். குகதாசனைக் கொண்டுவருவது தன்னைப் பலப்படுத்தும் என சுமந்திரன் கணக்குப் போட்டிருக்கலாம். இந்த நிலையில்தான் குகதாசனை தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் சம்பந்தன் அதிரடியாக நீக்கினார். திருமலையில், தென்னமரவாடி போன்ற தமிழ் மக்கள் மீளக்குடியேறிய பகுதிகளின் அபிவிருத்திக்காகவும், மக்களின் மீள்குடியேற்றத்தை பலப்படுத்தவும் முக்கியமானபங்களிப்பைவழங்கியவர் குகதாசன். பொறுப்புக்களிலிருந்து அவரை அகற்றியதன் மூலம் அவரைப் பலவீனப்படுத்த சம்பந்தன் முயன்றுள்ளார்.

**பதவி துறப்பாரா?**

சம்பந்தனுக்கு இப்போது 90 வயது. பாராளுமன்றத்தில் உள்ளவர்களில் வயது முதிர்ந்தவர் அவர்தான். கட்சித் தலைமைப் பதவி தன்னிடம் மீண்டும் வரப்போவதில்லை என்பது அவருக்குத் தெரியும். ஆனால், எம்.பி பதவியை வைத்துக் கொண்டிருப்பதன் மூலம் சில சிறப்புரிமைகள் அவருக்குள்ளது. அவற்றை விட்டுவிட அவர் தயாராகவில்லை. அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கொழும்பு - 7 பௌத்தலோக மாவத்தை பகுதியில் அவருக்கு வழங்கப்பட்ட கடுமையான பாதுகாப்புடன் கூடிய சொகுசு பங்களாவில்தான் அவர் இப்போதும் இருக்கின்றார். எம்.பி பதவியைத் துறந்தால் அந்த பங்களாவிலிருந்து அவர் வெளியேற வேண்டியிருக்கும். ஆனால், சுமந்திரன் சொல்லியிருப்பது போல எதிர்க்கட்சித் தலைவருக்கான அந்த பங்களாவை விட்டு வெளியேறுவது அவருக்கு கௌரவம்!

ஜே.வி.பியின் தலைவராக நீண்டகாலம் இருந்த சோமவன்ச அமரசிங்கபாராளுமன்றஉறுப்பினராக இருக்கவில்லை. ஆனால், கட்சியைக் கட்டுப்படுத்தும் ஆளுமை அவருக்கு இருந்தது. அதேபோலத்தான், சோனியா காந்தி காங்கிரஸ் ஆட்சியிலிருந்த காலத்தில் கூட எம்.பி.யாக இருக்கவில்லை. ஆனால், மன்மோகன் சிங்கின் ஆட்சி அவரது கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், எம்.பிபதவி இல்லையெனில் தன்னிடம் எந்தப் பிடியும் இல்லாமல் போய்விடும் என சம்பந்தன் அஞ்சுகிறாரா? அல்லது, அதன் மூலம் கிடைக்கும் சிறப்புரிமைகளை இழந்துவிட அவர் தயாராகவில்லையா?

**அகிலன்**

# பாராளுமன்றத்தில் இலங்கையின் தேர்தல் முறை திருத்த யோசனை



இலங்கையில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சமகாலத்தில் நடைமுறையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட (பல அங்கத்துவ) தேர்தல் தொகுதியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் அல்லது பல வேட்பாளரை உள்ளடக்கிய ஒரு குழுவுக்கோ அல்லது கட்சிக்கோ அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப ஆசனங்களை ஒதுக்கும் சில வகையான உபாயங்களை உள்ளடக்கிய ஒரு வாக்களிப்பு முறையே விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை எனப்படுகின்றது.

ஒரு உண்மையான ஜனநாயகத்தில் எல்லாவிதமான அபிப்பிராயங்களும் அவை நாட்டில் பெற்றிருக்கும் ஆதரவுக்கு விகிதாசாரமாக சட்டசபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்பதே இம்முறைக்கு பின்னணியாகவுள்ள தத்துவமாகும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர். இத்தேர்தல் முறையிலுள்ள தனிமாற்று வாக்குமுறையை சி.சி.ஜி.அந்திரே மற்றும் தோமஸ்காரே ஆகியோர் அறிமுகப்படுத்தினர். எனினும் இந்த முறை பிரபல்யமடைவதற்கு பிரித்தானிய அரசியல் மேதை யோன் ஸ்ருவோட்மில் காரணமாக இருந்துள்ளார்.

இலங்கையில் 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு வரை தொகுதிவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறை நடைமுறையில் இருந்தது. எனினும் இத்தேர்தல் முறை ஜனநாயகத்துக்கு முரணானதாக கருதப்பட்ட நிலையில் பல்வேறு குறைபாடுகளையும் இத்தேர்தல் முறை கொண்டிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டது. நாடு தழுவிய ரீதியில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப. பாராளுமன்றத்தில் அவை பெறும் ஆசனங்களுக்கிடையே முரண்பாட்டுத் தன்மையை அவதானிக்க முடிந்தது. அதாவது விகிதாசாரம் பேணுவதாக அமைந்திருக்கவில்லை.

ஒரு தேர்தல் தொகுதியில் பெரும்பாலான வாக்காளர்கள் விரும்பாத போதும் உறுப்பினராக ஒருவரை தெரிவுசெய்யும் நிலை காணப்பட்டது. மேலும் இத்தேர்தல் முறையில் வாக்காளர்களின் தெரிவுகளுக்கிடையே ஒரு சமத்துவமற்ற தன்மை காணப்பட்டது. இவ்வாறாக பல்வேறு குறைபாடுகளை தொகுதிவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறை கொண்டிருந்த நிலையில் அதனால் ஏற்பட்ட அதிருப்தி நிலையானது விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு உந்துசக்தியாக அமைந்தது.

அத்தோடு திறந்த பொருளாதார முறைக்கு சார்பாக உருவாக்கப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு அடிக்கடி மாற்றப்படுவதை தடைசெய்ய வேண்டும் என்பதை இலக்காக கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு சார்பான வகையிலேயே விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி இருந்தது என்பதும் உண்மையாகும்.

### புஸ்வாணமாகிய கோரிக்கைகள்

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை பல்வேறு சாதக விளைவுகளுக்கும் வித்திடுவதாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனடிப்படையில் கட்சிகள் பெற்ற வாக்குகளுக்கும் அவற்றுக்கு கிடைக்கும் ஆசனங்களுக்குமிடையே விகிதாசாரத்தை பேணுவதாக அமைதல். ஜனநாயகம் என்பது பெரும்பான்மையோர் ஆட்சி என்ற தத்துவத்தை இயலச்செய்தல். நாட்டின் சகலவிதமான அரசியல் அபிப்பிராயங்களும் ஆட்சி அமைப்புக்களில் பிரதிநிதித்துவம் பெறுவதை இயலச் செய்வதாக அமைந்திருத்தல்.

பலமான எதிர்க்கட்சி ஒன்றினை உருவாக்கும் நிலை ஏற்படுதல். தொகுதிவாரியாக செறிவாக இல்லாத இனங்கள் மாவட்ட ரீதியில் கணிசமான அளவு இருப்பின் தங்களுடைய பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பும் வாய்ப்பு ஏற்படுதல் போன்ற பலவும் இத்தேர்தல் முறையினால் கிடைக்கின்றது. மேலும் இம்முறையின் மூலம் இடைத்தேர்தல் இல்லாததால் இடைத் தேர்தலுக்காக செலவிடப்படும் பணம் மீதமாகின்றது என்றெல்லாம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு சாதகமான பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் முன்வைக்கப் பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சமகாலத்தில் இலங்கையில் நடைமுறையில் உள்ளது. எனினும் இத்தேர்தல் முறை எதிர்பார்ப்புகளை மழுங்கடித்து நாட்டின் அபிவிருத்திக்கும் ஐக்கியத்திற்கும் குந்தகமாக இருந்து வருகின்ற விடயம் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இதனடிப்படையில் விகிதாசார தேர்தல் முறையின் பாதக விளைவுகள் பின்வருமாறு முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தேர்தல் முறையை விளங்கிக் கொண்டு உரியவாறு வாக்களிப்பதில் வாக்காளர்கள் இடர்படுகின்றனர். இதனால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இம்முறையின் மூலம் இடைத்தேர்தல்கள் நடாத்தப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லாததால். இடைக்காலங்களில் அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி குறித்த மக்களின் நிலைப்பாட்டை அறியமுடியாதுள்ளது. தேர்தலுக்கான செலவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. உட்கட்சிக்குள்ளேயே அல்லது உட்கட்சி வேட்பாளர்களுக்கிடையிலேயே பிரிவினைகள் அல்லது பிளவுகள் ஏற்படுவதற்கு இத்தேர்தல் முறை வலுசேர்க்கின்றது. தேர்தல் மாவட்டமாக அல்லது பல் அங்கத்துவ தேர்தல் தொகுதியாக தேர்தல் தொகுதிகள் அமைந்திருப்பதனால் பிரதிநிதிகளின் கண்காணிப்பு எல்லை அதிகமாக உள்ளது. இதனால் பிரதிநிதிகளுக்கும் மக்களுக்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது. பிரதிநிதித்துவ முறையின் கீழ் வேட்பாளர்கள் நியமனப் பட்டியல் அடிப்படையில் இடம்பெறுவதால் வேட்பாளர்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது. விருப்பு வாக்கு முறை ஒரே கட்சியின் வேட்பாளர் மத்தியில் பிளவுகளுக்கு வலுசேர்க்கின்றது.

இம்முறையில் காணப்படும் போனஸ் உறுப்பினர் முறையானது உண்மையான விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு தடையாகவுள்ளது. அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் அதிகமாகும். கட்சிப் பட்டியலில் யார் யார் இடம்பெற வேண்டுமென தலைமையே தீர்மானிப்பதாலும் தேசியப் பட்டியலில் முன்னுரிமை ஒழுங்கினை தலைமை தீர்மானிப்பதாலும் இந்நிலை ஏற்படுகின்றது என்றெல்லாம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இக்குற்றச்சாட்டுக்களில் நியாயத்தன்மை இருப்பதையும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் குறைபாடுகளை கருத்தில்கொண்டு புதிய தேர்தல் முறையொன்றினை முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே எதிரொலித்து வருகின்றது. புதிய அரசியலமைப்பு குறித்த முன்னெடுப்புக்கள் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் புதிய அரசியலமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவினரிடமும் பொதுமக்களும். அமைப்புக்களும் புதிய தேர்தல் முறையின் அவசியம் தொடர்பில் கருத்துக்கள் பலவற்றையும் முன்வைத்திருந்தமையும் தெரிந்ததாகும்.

எனினும் புதிய அரசியலமைப்பு சாத்தியமாகாத நிலையில் கோரிக்கைகள் புஸ்வாணமாகி இருந்தன. இதனிடையே தொகுதிவாரி பிரதிநிதித்துவம் மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் இரண்டும் கலந்த கலப்புத் தேர்தல் முறை ஒன்றினை நாட்டில் அறிமுகப்படுத்துவது குறித்து ஆழமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றிருந்தன. எனினும் இது நிறைவேறவில்லை. எவ்வாறெனினும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சிறுபான்மையினர் சாதக விளைவுகள் பலவற்றையும் பெற்றுக் கொள்ள அடித்தளமாக அமைந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே தான் சிறுபான்மையினர் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பாதுகாப்பான முறை என்று விகிதாசார தேர்தல் முறை வர்ணிக்கப்படுகின்றது.

மலையக மக்களை பொறுத்த வரையில் அவர்கள் சுமார் நாற்பது வருட காலமாக பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை இல்லாத ஒரு சமூகமாக இருந்தனர். இவ்வுரிமைகளை பறித்தெடுத்த ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தனது பாவத்துக்கு பிராயச்சித்தமாக மீண்டும் இவ்வுரிமைகளை வழங்கிய நிலையில் படிப்படியாக மலையக மக்களின் அரசியல் ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கியது. உள்ளூராட்சி சபை. மாகாண சபை. பாராளுமன்றம் போன்றவற்றில் மலையக மக்களின் பிரதிநிதிகள் கால்பதிக்கத் தொடங்கினர். இதனால் அபிவிருத்திக்கு வலுசேர்க்கப்பட்ட நிலையில் ஏனைய இனங்களுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழலும் உருவானது. இந்நிலைக்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் கைகொடுத்தது என்பதை மறுப்பதற்கில்லை. இந்நிலையில் தொகுதிவாரி தேர்தல் முறையோ அல்லது கலப்புத் தேர்தல் முறையோ இத்தனை சாதக விளைவுகளையும் ஏற்படுத்தி இருக்குமா என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

### சிறுபான்மையினர் ஆதரவு

இதனிடையே தேர்தல் முறை திருத்தம் தொடர்பில் இப்போது அரசின் கவனம் திரும்பியுள்ளது. இதனிடையே நடைமுறையிலுள்ள தேர்தல் முறை சட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. ஊழல் நிர்வாகத்துக்கும். அரசியல் கட்டமைப்பின் பலவீனத்திற்கும் தேர்தல் முறைமையே காரணமாகுமென்று குற்றம்சாட்டப்படுகின்றது. மக்கள் தேர்தல் முறைமையில் மாற்றத்தைக் கோருகின்றனர். அதற்கான நடவடிக்கை களை முன்னெடுக்கும் போது ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள். சிறந்த அரச நிர்வாகத்தை தோற்றுவிக்கவேண்டும் என்பதற்காகவே தேர்தல் முறைமை சட்டத் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன.

இதேவேளை சிறுபான்மை கட்சிகள் சமகாலத்தில் நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன. தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் நடைமுறையிலுள்ள பாராளுமன்ற தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் நிராகரிப்பதாக தமிழ். முஸ்லிம் அரசியல் கட்சிகள் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளன. மேலும் பாராளுமன்ற தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கு முன்பதாக தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக்குழுவின் அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும் என்றும் இச்சந்திப்பின்போது வலியுறுத்தல்கள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வாறெனினும் ஒரு சமூகத்தின் அபிவிருத்தியிலும் சரி. நாட்டின் அபிவிருத்தியிலும் சரி தேர்தல் முறைமை காத்திரமான பங்காற்றுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் இன்னும் பல்வேறு வெற்றி இலக்குகளையும் அடைய வேண்டிய நிலையில். பொருத்தமான தேர்தல் முறையினை அறிமுகம் செய்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும். புதிய தேர்தல் முறையானது சகல இனங்களினதும் உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்கவேண்டும்.

**துரைசாமி நடராஜா**

# “இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது”

– பேராசிரியர் சி.பத்மநாதன் –

யாழ்ப்பாணம் அராலியை பிறப்பிடமாக கொண்ட பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கையின் வரலாற்றுப் பேராசிரியரும் கல்விமானும் ஆவார். இலண்டன் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முனைவரான (Ph.D.in South Asian History, University of London) இவர், இலங்கையில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பணியாற்றியவர். வரலாறு, சமயம் தொடர்பிலான பல நூல்களை எழுதியவர். இவற்றில் 'இலங்கை தமிழ் சாசனங்கள்', 'இலங்கைத் தமிழர் வரலாறு', 'கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்' (கி.மு 250 - கி.பி 300), 'The Kingdom of Jaffna', 'வன்னியர் யாழ்ப்பாணம்' போன்ற வரலாற்று நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

**கேள்வி - புறச்சான்றுகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழர்களின் இருப்பு எவ்வளவு காலத்திற்கு முற்பட்டது என உறுதியாக நிறுவ முடியும்? அவ்வாறு கருதக்கூடிய முக்கிய சான்றுகளாக நீங்கள் எவற்றை எடுத்தாள்கின்றீர்கள்?**

பதில் - தமிழர்களின் இருப்பு என்று சொல்வதிலும் பார்க்க தமிழ் மொழி பேசுவோரின் இருப்பு என்று சொல்வது பொருத்தமானது. ஏனென்றால், தமிழ் மொழி பேசுவோரிடையே புராதன காலத்தில் இனக்கலப்பு ஏற்பட்டிருக்கின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் இயக்கருக்கும், நாகருக்கும் இடையில் அமைந்த கலப்பினைப் பற்றிப் பேசுகின்றது. "இயக்கரோடு கூடி வலியராகி நாகர் நகரெல்லாம் ஆட்சி செய்தனர்" என்று அந்நூல் குறிப்பிடுகின்றது. காலவரையறை பற்றி பேசுமிடத்து தமிழ் மொழியானது இலங்கையைப் பொறுத்தவரையில் பெருங்கற்கால பண்பாட்டோடு தொடர்புடையது. அந்தப் பண்பாடு கி.மு 8ஆம் நூற்றாண்டிலே இங்கு பரவத் தொடங்கிவிட்டது. அண்மைக்காலத்தில் எமக்குக் கிடைத்த ஆதாரபூர்வமான சான்றுகளின் அடிப்படையில் நாகர்களே பெருங்கற்கால பண்பாட்டை இலங்கையிலே பரப்பினார்கள். நாகர் மூலமாகவே தமிழ் மொழி பரவியது என்றும் கூறலாம்.

தமிழ் மொழியில் எழுதப்பட்ட அரும்பொருட்கள், பண்பாட்டுச் சின்னங்கள் பலவகைப்பட்டவை. அவை அன்றாட வாழ்வில் பயன்படுத்திய அம்மி, குளவி, உரல், ஆட்டுக் கல், எண்ணெய் வடிக்கும் செக்கு முதலானவற்றிலும், வழிபாட்டு சின்னங்களாகிய நாக வடிவங்கள், நாக சிற்பங்கள், சிவலிங்க வடிவம், சைவ சின்னங்களான நந்தி, வாகனங்களான எலி, நாய் ஆகியவற்றிலும் சில விநாயகர், வைரவர், அம்மன் போன்ற சைவ சமய வடிவங்களிலும் காணப்படுகின்றது.

இது மட்டுமன்றி வழிபாட்டுத் தலங்களில்அடிமட்டஅத்திவாரங்களிலும்கூட தமிழ் மொழியில் எழுத்துப் பொறித்த நாகரைக் குறிப்பிடும் வசனங்கள் காணப்படுகின்றன. அதேபோல பௌத்த சமய வழிபாட்டு சின்னங்களாகிய புத்தர் பெருமானுடைய சிற்பங்கள், போதிசத்துவர் வடிவங்கள், புத்தர் பாதம் முதலானவற்றிலும் தமிழ் மொழியில் நாகரைக் குறிப்பிடும் வசனங்கள் காணப்படுகின்றன.

**கேள்வி - இலங்கையில் தமிழரின் தொன்மையான இருப்பை எடுத்துக்காட்டும் முக்கிய தொல்லியல் சான்றுகளாக நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்?**

பதில் - தொல்லியல் அடிப்படையிலே தமிழர் பண்பாடு தொடர்பான மிக காலத்தால் முற்பட்ட தொல்பொருள் சின்னங்கள் பெருங்கற்கால பண்பாட்டை சேர்ந்தவை. அண்மைக் காலத்தில் பெருந்தொகையான இடங்களில் நாட்டின் பலபாகங்களிலும் இந்தச் சின்னங்கள் அகழ்வாய்வுகளின் மூலமாக அறியப்பட்டுள்ளன. இவற்றின் ஆய்வுகளைப் பற்றிய விபரங்கள் தொடர்பாக மிக அரிதாகவே அறிக்கைகள் வெளிவந்தன. பொன்பரிப்பு, மாந்தை, திஸ்ஸமகாரகம, அநுராதபுரம் ஆகிய இடங்களிலேயே தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெளிநாட்டு ஆய்வாளர்கள் பலர் அகழ்வாய்வுகளை கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

பெருந்தொகையான பெருங்கற்கால பண்பாட்டு சின்னங்கள் இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதியில் கிடைக்கின்ற போதிலும், அவை கந்தரோடையைத் தவிர ஏனைய இடங்களில் அகழ்வாய்வு செய்யப்படவில்லை. கந்தரோடையிலும் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பு Poul E Peirs நடத்திய மேலோட்டமான ஆய்வுகளைப் பற்றி அவர் கட்டுரைகளை எழுதியுள்ளார். 1966இல் தொல்பொருள் திணைக்கள அதிபராக இருந்த கொடக்கும்புர தலைமையில் கந்தரோடையில் மீண்டும் ஒரு அகழாய்வு தொட்டம் தொட்டமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவரும் தனது அறிவுக்கு எட்டியவாறு அங்கு கிடைத்த தொல்பொருட்கள் சிலவற்றைப் பற்றி ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், அங்கு அந்நாட்களில் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பல பொருட்கள் யாழ்ப்பாணத்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதில் பலவகையான பொருட்கள் உள்ளன. எழுத்துப் பொறித்த கலவோடுகள், மட்பாண்ட துண்டங்கள், வழிபாட்டுச் சின்னங்களாக பயன்படுத்திய சதுர வடிவ கற்கள் ஒன்று அல்லது இரண்டு பயன்பாட்டிலிருந்த கல்லில் குடையப்பட்ட நீர்த்தொட்டி ஒன்று, குளக்கட்டில் பாவனையில் இருந்த கல்லில் குடையப்பட்ட சிறிய கலன்கள் - அவை மருந்துகள் செய்ய பயன்பட்டிருக்கலாம். இவற்றோடு மிகப் பெருமளவிலான மணிகள் பலவகைப்பட்டவை, அறுத்த சங்குகளின் துண்டங்கள் கண்டறியப்பட்டன. சங்குகள் காணப்படவில்லை. மணிகள் பெருமளவில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி பாவனைப் பொருட்களான களி மண்ணில் செய்யப்பட்ட 4 அலகுகளைக் கொண்ட ஒரு அழகான விளக்கு, சில படிமங்களும் அங்கு காணப்படுகின்றன. ஆனால் இவை நெடுங்காலமாக ஒழுங்குபடுத்தப்பட்டு விபரக் குறிப்புக்களோடு வைக்கப்பட்டிருக்கவில்லை. இப்பொழுது தான் இவற்றை மரப்பெட்டிகளிலோ, அலுமாரிகளிலோ வைத்துப் பேணுகிறார்கள். ஆனால் அவற்றைப் பற்றிய விபரக் குறிப்பு ஏடுகள் எதுவும் அங்கில்லை. அங்கு இருக்கின்றவர்களுக்கும் அவற்றிலே இருக்கின்ற எழுத்துக்களை தெரிந்து கொள்கின்ற தகமை காணப்படவில்லை. தொல்பொருள் திணைக்கள அனுமதி பெற்றே அந்நாட்களில் இவற்றை எம்மால் பார்க்க முடிந்தது. பார்த்து படமெடுப்பதற்கு அந்நிறுவனத்தில் உள்ளவர்கள் தமக்கு அனுமதி வழங்க அதிகாரம் இல்லை என்றே சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல இந்தக் கட்டுப்பாட்டுகளின் காரணமாகவும், அக்கறையின்மையாலும் புலமையாளர்கள், வரலாற்றாசிரியர்கள் இந்த அருங்காட்சியகத்தில் இருக்கின்ற தொல் பொருட்களை ஆராய முற்படவில்லை.



இதற்கிடையில 2011ஆம் ஆண்டு முதலாக யாழ்.பல்கலைக்கழகமும், அவர்களுடன் தொல்பொருள் திணைக் களத்தினரும் சில அகழ்வுகளை நடத்தியிருக்கின்றார்கள். இது தொடர்பான எழுத்து வடிவமான அறிக்கைகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. சில பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டிகளில் இங்கு காணப்படும் பொருட்கள் பற்றி மிகச் சுருக்கமான விளக்கத்தை திரான் தெரணியகல வழங்கியுள்ளார்.

மாந்தையைப் பொறுத்தவரையில் அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் எல்லாம் அநுராதபுரத்திலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பார்ப்பது மிகவும் சிரமமானது. நாங்கள் பேசுகின்ற நாகர் பற்றிய தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய பண்பாட்டுச் சின்னங்கள் பெரும்பாலும் அகழ்வாய்வுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படாதவை. மேலாய்வின் மூலமாக அறியப்படுபவை. இவற்றிலே தமிழ் பிராமி வடிவங்களில் எழுத்துக்கள் இருப்பதால், அவற்றின் கால எல்லையை கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கும், கி.பி ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவையாக வரையறை செய்துகொள்ள முடிகின்றது. சில எழுத்துக்களைப் பொறுத்தவரையில் வரிவடிவ வளர்ச்சியை எம்மால் வரையறை செய்ய முடிகின்றது.

மட்டக்களப்பிலுள்ள நாவற்குடா, நெடியமடு, பாலாமடு, திருகோண மலையிலுள்ள செம்பி மலை, வவுனியாவிலுள்ள நெடுங்கேணி ஆகியவற்றிலே காலத்தால் மிகவும் பிற்பட்ட ஓரளவு உருமாறிய தமிழ்ப் பிராமி வடிவங்கள் காணப்படுகின்றன. அவை நான்காம், ஐந்தாம் நூற்றாண்டிற்குரியவை. ஏனையவை அவற்றிற்கு முற்பட்ட காலத்திற்குரியவை. மட்டக்களப்பு வெல்லாவெளி, வந்தாறுமூலை, இலாவாணை, வேரம், வாகரை ஆகிய பகுதிகளிலும் திருகோணமலையில் அகஸ்தியர் ஸ்தாபனம், கோணேசர் கோவில் பகுதியில் காணப்படும் சின்னங்கள் கி.மு 2ஆம், 3ஆம் நூற்றாண்டிற்கு உரியவை என்பதை எழுத்துகளின் உருவ அடிப்படையில் உறுதிசெய்துகொள்ள முடிகின்றது.

**கேள்வி - அகழாய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையிலும் கூட இலங்கையில் வேறு எந்தப் பகுதியையும் விட கிழக்கில் அதிக பிராமி வடிவங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. அதற்கான காரணங்கள் என்ன?**

பதில் - இதுவரை காலமும் தமிழ்ப் பிராமி வடிவங்களை அங்குள்ள எவரும் அறிந்திருக்கவில்லை. தாம் வாழும் சுற்றாடலிலும், காட்டுப் பகுதிகளிலும், வயல் நிலங்களிலும் இருக்கக்கூடிய பண்பாட்டுச் சின்னங்களை அவர்கள் அவதானித்திருந்தும் அவற்றினுடைய பெறுமதியை உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஏறக்குறைய 10 - 12 ஆண்டுகளுக்கு இடையில் தான் இதுபற்றிய உணர்வு ஏற்படலாயிற்று. அங்கு தொழில் புரிகின்ற சில கலாசார உத்தியோகத்தர்களும், சில நவீன மருத்துவம் கற்ற வைத்தியர்களும், கல்லூரி ஆசிரியர் சிலரும் விநோதமான பொருட்களைக் கண்டு படங்களை எடுத்து அவற்றிலே ஏதோ அதிசயமான விபரங்கள் இருப்பதை உணர்ந்தார்கள். ஆனால் எழுத்துக்களை அவர்களால் புரிய முடியவில்லை.

நாவற்குடாவில் கலாசார உத்தியோகத்தராக இருக்கின்ற எழில்வாணி பத்மகுமார் தான் முதன் முதலாக எம்மைத் தொடர்புகொண்டு இவற்றைப் பற்றி எமக்கு அறிமுகம் செய்தார். அதன் விளைவாகவே இவற்றின் புகைப்படங்களை பெற்று ஆராய்ந்ததோடு அவை காணப்படும் இடங்களுக்கும் நாங்கள் பிரயாணம் செய்து நேரிலே அவதானித்து அந்தச் சமயங்களில் படங்களை எடுத்தோம். அதிக உயர்வான மலைகளிலும், காட்டுப் பகுதிகளிலும் உள்ளவற்றை என்னால் பார்க்க முடியவில்லை. மற்ற எல்லாவற்றையும் நேரிலே சென்று பார்க்க முடிந்தது. அம்பாறையிலுள்ள சங்கமன்கண்டி போய் அங்குள்ளவற்றை பார்க்க முடிந்தது. இது தற்செயலாகத் தான் கிடைத்தது.

நாங்கள் முதன் முதலாக வெல்லாவெளி, விவேகானந்தபுரம், படலைக்கல் என்னும் இடங்களுக்குச் சென்றோம். எம்முடன் இந்து கலாசார திணைக்களம் மட்டக்களப்பில் நடத்திய சாசனவியல் பயிலரங்கில் பங்கு கொள்வதற்காக இந்தியாவிலிருந்து வருகை தந்த தமிழ்நாடு தொல்லியல் துறை திணைக்கள சிரேஸ்ட சாசன வியலாளர்களான ராஜகோபால், வேதாசலம், சாந்தலிங்கம் முதலானவர்களும் வந்திருந்தார்கள்.

இந்த இடங்களில் காணப்பட்ட கல்வெட்டுக்களே முதலாவதாக எம்மால் கண்டறியப்பட்டது. பானை ஓடுகளிலும், காசுகளிலும் தமிழ் வாசகங்கள், தமிழ் பிராமியில் பொறிக்கப்பட்டிருப்பதை முன்பு சிலர் கண்டு அவற்றைப் பற்றி கட்டுரைகளை எழுதியிருந்தார்கள். ஆனால் கல்லிலே வெட்டப்பட்ட தமிழ்ப் பிராமி வடிவங்களிலான ஒரு கல்வெட்டு என்ற வகையில் இதுதான் முதலாவதாக கண்டுபிடிக்கப்பட்டது. அதிலே இஸ்காவு காலத்து ஆந்திர நாட்டு எழுத்துக்களின் செல்வாக்கு இருப்பதனால், இந்தக் கல்வெட்டு 4ஆம், 5ஆம் நூற்றாண்டிற்கு உரியது என்று நாம் அதை அடையாளப்படுத்தினோம்.

தொடரும்...

# மாவீரர்களுக்குரிய மதிப்பை உலகு கொடுக்கவும், ஈழத்தமிழர் வெளியக தன்னாட்சியுரிமையை ஏற்கவும் உழைப்போம்

"ஈழத்தமிழர்கள் வீரத்தைக் கொண்டே விரல் மடிப்பதெனில் - கார்த்திகை மாதமே எமக்குக் கண்திறந்த மாதம் - ஈழத்தமிழருக்கு இருநூறு கைமுளைத்ததும் - ஈழத்தமிழருக்கு கூரிய வேல் துளைத்ததும் இந்த மாதத்தில்தான். தமிழரை மீண்டும் தமிழரென்றாக்க முதல்நாள் பிள்ளையொன்று விழி திறந்தது. தமிழரின் நெஞ்சில் இடிசொருகிவிட்டு மறுநாள் பிள்ளையொன்று விழி மூடியது. ஆண்டுகள் வேறாயினும் திகதிகள் அருகருகாயின. இது தற்செயலான சம்பவம் அல்ல. சரித்திரமான அதிசயம்.". எனத் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைக் கவிஞனாகத் திகழ்ந்த புதுவை இரத்தினதுரை கவிதா நயத்துடன். தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 26.11.1954 இல் மண்ணில் மலர்ந்தமையையும். லெப்டினன்ட் சங்கர் (சத்தியநாதன்) தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் வீரச்சாவடைந்த வீரனாக 27.11.1982இல் தாய் மண்ணின் விடுதலை வித்தாகியதையும் வரலாற்றுப் பதிவாக்கிய வரிகள் இவை.

இதன் வழி ஈழத்தமிழர் வரலாற்றில் கார்த்திகை 26 அதன் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்றின் ஆற்றலாக அமைந்ததையும். லெப்டினன்ட் சங்கர் விடுதலை வரலாற்றின் உந்துசக்தியாக மாவீரப் பயணத்தை கார்த்திகை 27இல் தொடக்கி வைத்தமையையும் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதா வரிகள் இன்தமிழால் ஒவ்வொரு தமிழனுடைய இதயத்திலும் வரலாற்றுப் பதிவாக்குகின்றன. அந்த வகையில் விழி திறந்த தலைவனை நன்றியோடு கொண்டாடும் கார்த்திகை 26ம் வழி திறந்த மாவீரனை கைபிடித்து எழுந்தே மாவீரர் உறுதியின் உறைவிடங்களில் தேசவிருள் அகல மாவீர தீபம் ஏற்றி நாட்டையே ஒளித்தேசமாக்கி மரணமில்லாத அந்த மனிதகுலத்தின் வாழ்கின்ற வல்லமையைத் தமதாக்கி ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகத்தின் தேசிய நாளையும் அதுவாக்கி விதைகுழிப் பெருநாளாய் வித்துடல்கள் மேல் "மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ் மீது உறுதி - வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி - விழிமூடி இங்கே துயில் கொள்ளும் வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி - இழிவாக வாழோம் தமிழீழப் போரில் இனிமேலும் ஓயோம் உறுதி." என ஈழத்தமிழர்களின் இறைமையின் காவற் தெய்வங்களின் காணிக்கைத் திருநாளில் ஊரே கூடி ஒப்பாரி வைக்காது உருக்கொண்டாடி உறுதி எடுத்துக்கொள்கையில் உலகெங்கும் வாழும் புலம்பெயர் ஈழத்தமிழர்களும் இணைந்தே உலக விழாவாக மாவீரர் நாளை கார்த்திகை 27இல் முன்னெடுப்பது இன்றையத் தமிழர் சமகால வரலாறு.

கார்த்திகை மாதத்தில் பூப்பதாலும் மஞ்சள் சிவப்பு வர்ணமாய் மலர்வதாலும் அதன் கழுத்துப்போல் இருக்கின்ற நுனியில் அது நஞ்சைக் கொண்டிருக்கிறது என மலர் ஆய்வாளர்கள் கூறுவதாலும் கார்த்திகை மலரை மாவீரர்களுக்கான சின்னமாக அறிவிக்கப்பட்டது என்பது தேசியக்கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கார்த்திகைப் பூ ஈழத்தமிழர்களின் தாயகத்து தேசிய மலராக தாயகத்தின் தேசிய நாளாம் மாவீரர்நாளில் தாயகத்திலும் உலகெங்கும் வாழும் தமிழர்களாலும் அணியப்பெற்று வருவதும் சமகால ஈழத்தமிழர் பண்பாடாக உள்ளது.

தமிழரின் தொன்மையும் தொடர்ச்சியுமான சிவவழிபாட்டில் உலகையும் மக்களையும் காக்க உலகையும் மக்களையும் அழிக்க எழுந்த பாற்கடல் நஞ்சை சிவபெருமான் கழுத்திலே தாங்கினான் என்பதால் 'நஞ்சுண்ட கண்டன். நீல மிடற்றன்' என்கின்ற சொல்லாட்சிகள் தமிழர் பண்பாட்டில் உலகையும் மக்களையும் காப்பதாகப் போற்றப்படும் கடவுளைக் குறித்து நிற்கின்றன. இதனால் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் தமிழர் பண்பாட்டு வழமையாகவுள்ளது. இதனைத் தமிழரின் மெய்ப்பொருள் நூலான திருக்குறள் தவம் என 27 வது இயலில் எடுத்து விளக்கி 268வது குறளில்

**"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய**
**மன்னுயி ரெல்லாந் தொழும்"**
என மாவீரர்களைத் தெய்வமெனப் போற்றல் தமிழ் மரபு என்பதை உறுதி செய்கிறது. அதுமட்டுமல்லாது இல்லறவாழ்வின் பயன் இவ்வாறு வாழ்தலேயென 50வது திருக்குறளில்.


**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**
எனத் தெளிவாக எடுத்துரைத் திருப்பதையும் காணலாம். அதுமட்டுமன்றி குடிமை குறித்து உலகிலேயே மிகச்சிறப்பான விளக்கத்தைத் தொகுத்து குடிமை என்னும் 96வது இயலை படைத்தளித்த வள்ளுவர் 955 வது குறளில்.

**"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பிற் றீத லின்று"**
என குடிமைக்கு மிடிமையோ அடிமையோ தோன்றி மக்கள் தமது தன்னாட்சியை இழக்கின்ற அபாயங்கள் தோன்றுகின்ற நேரத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சியைத் தொன்மைப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதன் மூலம் முன்னெடுத்து எப்பொழுதும் தம்நிலைமைக்கு தாழ்மையை ஏற்படுத்தாத பண்பான "மானம்" போற்றுவதன் மூலம் மீளவும் விடுதலை வாழ்வு பெற வேண்டுமென விளக்குகின்றார். இதனால்தான்.

**"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே**
**கெட்டான் எனப்படுதனன்று"**
என கால்கழுவுகிற வாழ்வும் தன்னில் தங்கி வாழாது பிறரில் தங்கி அவர்கள் முகவர்களாக மண்ணையும் மக்களையும் அடிமைப்படுத்தும் கோமாளி வாழ்வும் வேண்டாமென்று தெளிவாகக் கூறும் வள்ளுவர் அவ்வாறு கெஞ்சியும் கொஞ்சியும் அஞ்சியும் சலுகை மனிதர்களாக வாழாது எந்தச் சிலுவையையும் சுமந்து மடிந்து உயிர்க்கும் உறுதியால் மரணமற்ற வாழ்வை வாழுமாறு 969 வது குறளால் அழைக்கும் வள்ளுவர்.

**"மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரின்"**
என கவரிமா என்னும் பனிப்பிரதேச மான் அதனுடைய உடலின் மயிர்களை வர்த்தக நோக்கில் போர்வைகள் செய்வதற்காக கத்தரித்தால் குளிர்தாங்காது இறந்து விடும் அவ்வாறு ஒரு மனிதனுடைய மானம் என்னும் தன்னளவில் தான் சுதந்திரமாக வாழும் பிறப்புரிமையான தன்னாட்சி இழக்கப்பட்டால் அவன் அடிமையுற்று மானமிழந்து வாழ்வதை விட மரணத்தால் அமைதி பெறுவதை விரும்புவதான் என எடுத்துரைக்கும் வள்ளுவர் அடுத்த 970 வது குறளில்.

**"இளிவரின் வாழாத மானமுடையார்**
**ஒளி தொழுதேத்து முலகு"**
என வாழ்கின்ற நிலைக்கு தாழ்வுவரின் அதனை எதிர்த்து போராடும் மானம் உடையார் செயற்கரிய செயலைச்



செய்வதால் அவர்களை உலகம் தொழுது போற்றும் என மாவீரம் உலகால் கொண்டாடப்படுவதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.

இதனை அடுத்த பெருமை என்கின்ற 98வது இயலில் 971வது குறளில் வள்ளுவர்.

**"ஒளியொருவற் குள்ள வெறு.்.கை யிளியொருவற்**
**க.்.திறந்து வாழ்து மெனல்"**
என பெருமை என்பது ஒருவர் தான் மற்றவர்கள் மனிதம் வாழச் செய்யாத அருஞ்செயலைத் தான் செய்தல் என்கின்ற உள்ள உறுதி ஒளி என்பதையும் அவ்வாறு ஒருவர் பிறர்வாழாத் தான் அருஞ்செயல்களைச் செய்யாது தானே வாழ்தல் அவருக்கு இளிவான மதிப்பை உலகில் பதிவாக்கும் என்பதையும் எடுத்து விளக்குவதன் மூலம் மனிதப்பிறப்பின் மகத்துவமே தன் ஆற்றலை அறிவை செல்வத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து வாழ்தல் என்கின்ற உயரிய உண்மையை உள்ளத்தில் பதிக்கின்றார்.

இதற்கு மனித சமத்துவம் போற்றப்பட்டாலே மனித ஆற்றல் சமுதாய வல்லமையாக வெளிப்படும் என்பதால் அடுத்த 972 வது குறளில்.

**"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"**
என சாதி மத மொழி நிற பிரதேச பால் பாகுபாடுகளற்ற ஆட்சி முறைமையுள் தான் மனிதன் செயற்கரிய செயலை செய்வதற்கான தன்மை நடைமுறைச்சாத்தியமாகும் என்பதை மாவீர வெளிப்பாட்டுக்கான முன்நிபந்தனையாக முன்வைக் கின்றார்.

இதற்கு அடுத்த 973வது குறளில் தான் புரட்சிகர செயற்பாட்டுக்கான அழைப்பு.

**"மேலிருந்து மேலல்லார் மேலல்ல கீழிருந்தும்**
**கீழல்லர் கீழல் லவர்"**
என வள்ளுவரால் விடுக்கப்படுகிறது.

எனவே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்னும் ஈழத்தமிழர்களின் மண் மீட்புக்கான ஆயுதப் போராட்டம் என்பது அவர்களின் தமிழ்ப்பண்பாட்டின் அடிப்படையில் தங்கள் மேல் சிறிலங்கா தொடுத்த "மக்கள் மேலான போரில்" தங்களுடைய உயிரையும் உடலையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாப்பதற்கான தேசிய விடுதலைப் போராட்ட ஆயுத எதிர்ப்பும் பாதுகாப்புமே ஒழிய அது பிரிவினைப் போரோ அல்லது பயங்கரவாதச் செயற்பாடோ அல்லது வேறு எந்த இனத்திற்கோ நாட்டுக்கோ எதிரான போரோ அல்ல. ஆனால் சிறிலங்காவும். அதன் ஆதரவு வல்லாண்மைகளும். பிராந்திய மேலாண்மைகளும் விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள் எனவும் பிறருடைய உயிரைக் காக்கத் தம் உயிரேயே அர்ப்பணித்த கரும்புலி மறவர்களை தற்கொலைப்படையினர் எனவும் இழிவுசெய்து வருகின்றனர்.

சிறிலங்கா முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் 176000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்த உலக வரலாற்றின் பின்னரும் கடந்த 14 ஆண்டுகளாக இன்று வரை உலகின் பல நாடுகளிலும் அமெரிக்க - இந்திய இணைப்புக் கட்டாயத்தின் மூலம் இன அழிப்பு செய்து அதுவும் சிறுவர்கள். பெண்கள். முதியவர். வலுவிழந்தவர்கள் என்று ஈழத்தமிழ் குடிமக்கள் அனைவரையும் தேசியத் தலைவரின் அன்பு மகனையும் பாலன் என்று கூட பாராது மிருகத்தனமான முறையில் இனப்படுகொலை செய்தமையும் ஈழத்தமிழினப் பெண்களை கூட்டாகவும் தனியாகவும் வன்முறைப்புணர்ச்சிகளுக்கு உள்ளாக்கி இனப்படுகொலை செய்து அவர்களின் நிர்வாண உடலங்களையும் காட்சிப் பொருளாக்கி மனித நாகரிகத்தையே அழித்த பின்னரும். இன்றும் அனைத்துலகச் சட்டங்கள் வழி அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்குள் இந்த இன அழிப்பாளர்கள் செல்லாது பலவழிகளில் பாதுகாத்துக் கொண்டு அவர்களுக்கான பொருளாதாரச் சிக்கலிலும் தாங்களே கைகொடுத்து அவர்களைப் பாதுகாத்து நிற்பதே இன்றைய சமகால அரசியல் வரலாறாக உள்ளது. இந்த நிலைமைகளை மாற்றாது வெறுமனே மாவீரர் நாட்களை பெருமை பேசு விழாக்களாக ஈழத்தமிழர்களும் 14 ஆண்டுகளாகக் கொண்டாடி வருவதும் வேதனையான ஈழத்தமிழர் வரலாறாக உள்ளது.

உண்மையில் இறைமையின் அடிப்படையில் அவர்கள் தங்களின் பிரிக்கப்பட முடியாத தன்னாட்சி உரிமையின் வழி தங்களுடைய அரசியல் எதிர்காலத்தைத் தங்களின் சொந்த மண்ணாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொடர்ந்து வரும் இலங்கைத் தீவில் தங்களுடைய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீளவும் அடைய முயற்சிப்பது எந்த வகையில் தவறாக உள்ளது.

**தொடரும்...**

மூத்த அரசியல் ஆய்வாளர்
சூ.யோ.பற்றிமாகரன்



# பிராந்திய செய்திகள்



## புதைகுழி அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறைவு



கொக்குத்தொடுவாய் பாரிய மனித புதைகுழி மேலும் விரிவடைந்து செவல்வதாக தெரியவந்ததையடுத்து அகழ்வுப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிறுத்தப்படும் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகுமென.

முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர். சடலங்களை அகழ்ந்து எடுக்கும் பணிக்கு பொறுப்பான முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ பிரதேச ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

"புதைகுழியானது கொக்கிளாய் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் 1.7 மீற்றர் நீளத்திற்கு நெடுஞ்சாலையை நோக்கி விரிவடைந்துள்ளமை ஸ்கேன் பரிசோதனை ஊடாக தெரியவந்துள்ளது. இதுதொடர்பிலேயேகலந்துரையாடப்பட்டது. இந்த புதைகுழி முற்று முழுதாக ஆராயப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அனைவரும் உள்ளனர்.

எனவே எதிர்வரும் வருடம் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

அகழ்வு நடவடிக்கைகளின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முறையாக முன்னெடுப்பதற்காக நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் வைத்தியர் வெளிப்படுத்தினார். இந்த அகழ்வுப் பணிகளை இலகுபடுத்துவதற்கும். ஒழுங்குபடுத்துவதற்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்படவுள்ளார். இதற்கான உத்தரவை நீதவான் அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளார். பகுப்பாய்வு டிசம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. "இரண்டாம் கட்ட புதைகுழி அகழ்வுப் பணிகள் ஒன்பதாவது நாளாக மேற்கொள்ளப்பட்டதோடு இத்துடன் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

**சந்தேகிக்கப்படும் சில ஆதாரங்கள்**

நவம்பர் 28 ஆம் திகதி வரை கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து குறைந்தது 39 பேரின் எலும்புகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் சில ஆதாரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. தற்போது 14 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்ட பகுதியில் அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதாக சட்டத்தரணி நிரஞ்சன் வெளிப்படுத்தியிருந்தார்.

கொக்குத்தொடுவாய் பாரிய புதைகுழியின் அளவை தீர்மானிப்பதற்காக கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்களாக ரேடார் கருவிகள் மூலம் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து முல்லைத்தீவு நீதவான் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ. தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ. முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள். சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில். கொக்குத் தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில் நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய் பதிக்க நிலத்தை தோண்டும் வேளையில் ஜூன் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைகளின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## கொழும்பில் அதிகரித்த டெங்கு காய்ச்சல்

*கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் 3,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக, வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார். தற்போது பெய்து வரும் அதிக மழையுடன் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி மேலும் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "கொழும்பில் தற்போது 3,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 80% டெங்கு என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டிசம்பரில் இது மேலும் அதிகரிக்கலாம் என்று எங்களுக்குத் தெரியும்" என கூறினார்.*

*இதற்கிடையில், 320 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருந்ததாக தெரிவித்த வைத்திய அதிகாரி, அவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுகளை வழங்கியதன் மூலம் குழந்தைகளின் எண்ணிக்கையை 102 ஆகக் குறைக்க முடிந்தது என்றும் கூறினார்.*

## விசேட வர்த்தமானி வெளியீடு

*நாட்டில் நடைமுறைக்கு வரும் வகையில் பல்வேறு பொருட்களுக்கு விசேட வியாபாரப் பண்ட வரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் விதிக்கப்பட்டுள்ளது.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் சில பொருட்களுக்கு வியாபாரப் பண்ட வரியை விதிக்க தீர்மானித்துள்ளார். இதன்படி 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் வகையில் குறித்த வரி விதிக்கப்பட்டுள்ளது.*

## பத்து இலட்சம் பேருக்கான விழிப்புணர்வும், பத்து இலட்சம் மரக்கன்றுகள் நடலும்

*கல்முனை கல்வி வலய கமு /கமு/மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மஹா வித்தியாலய அதிபர் வீ.எம். ஸம்ஸம் அவர்களின் வழிகாட்டலில் கமு/சது/சம்மாந்துறை அல்-அர்ஷத் மகா வித்தியாலயத்தில் தரம்-07 இல் கல்வி பயின்று வரும் ஜலீல் பாத்திமா மின்ஹா (மின்மினி மின்ஹா) எனும் மாணவியால் "காலநிலை மாற்றம்" எனும் தொனிப்பொருளில் பத்து இலட்சம் பேருக்கான விழிப்புணர்வும், பத்து இலட்சம் மரக்கன்றுகள் நடலும் திட்டத்தின் கீழ் கமு/கமு/மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மஹா வித்தியாலய காலை ஆராதனையின் போது மாணவர்கள் மத்தியில் உரையாற்றி பலரதும் கவனத்தை ஈர்த்தார்.*

*கமு/கமு/மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல்.றஜாப்தீன் அவர்களின் நெறிப்படுத்தலில் மிகச்சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் அனைத்து கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியினரும் பங்கேற்று குறித்த மாணவிக்கு மாலை சூடி, வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். - நூருல் ஹூதா உமர்*



## சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வீதம் இவ்வருடம் அதிகரிப்பு



கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில். இவ்வருடம் இடம்பெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்திற்குத் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் சாதகமான வளர்ச்சி காணப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் (01.11.2023) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

**சித்தியடைந்தோர் வீதம்**

மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 473,014 ஆகும். இவர்களில் 394,878 பாடசாலை ஊடாக விண்ணப்பித்தவர்கள், மற்றும் 78,136 தனியார் விண்ணப்பதாரர்கள். மொத்த விண்ணப்பதாரர்களில் 428,299 பேர் இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றியிருந்ததுடன், சித்தியடைந்தோர் தொடர்பிலான 90.54% வீதமானது மிகவும் சாதகமான நிலைமையாகும்.

இந்த வருட பொதுப் பரீட்சையின் பெறுபேறுகளை மாகாண ரீதியில் பகுப்பாய்வு செய்யும் போது 4 மாகாணங்கள் முன்னிலை பெற்றுள்ளதுடன் முதலிடத்தை தென் மாகாணம் பெற்றுள்ளது.


இது 77.57% வீதமாக வீதமாக காணப்படுகிறது. இரண்டாவது இடத்தில் 75.10% வீத சித்தி நிலையுடன் சப்ரகமுவ மாகாணமும், மூன்றாவது இடத்தினை 74.92% வீதத்துடன் மேல் மாகாணமும், நான்காவது இடத்தினை 74.50% வீதத்துடன் வடமேற்கு மாகாணமும் பெற்றுள்ளன.

**உயர்தர கல்வி**

மேலும், உயர்தர வகுப்பில் கல்வியை தொடர 5 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த சதவீதம் படிப்படியாக அதிகரித்துள்ளது. 2014 இல் 69.02% ஆகவும். 2015 இல் 69.33% ஆகவும். 2016 இல் 69.4% ஆகவும். 2017 இல் 73.05% ஆகவும், 2018 இல் 75.09% ஆகவும். 2018 இல் 73.84% ஆகவும். 2018 இல் 73.84% ஆகவும். 2018 இல் 76.59% ஆகவும். 2015 இல் 76.59% ஆகவும். 74.59% ஆகவும் உள்ளது.

இந்நிலையில். மிகவும் துல்லியமான பெறுபேறுகளை வழங்குவதற்கு கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் இரவும் பகலும் கடுமையாக உழைத்துள்ளனர். மேலும், பெறுபேறுகள் வெளியாகும் வரை பரீட்சைக்கு வெற்றிகரமாக உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றிகள்." என்றார்.





# சினி துளிகள்





## 80ஸ் பில்டப் படத்திற்காக நடிகர் சந்தானம் வாங்கிய சம்பளம்

டிடி ரிட்டர்ன்ஸ் படத்தின் வெற்றியை தொடர்ந்து மாபெரும் எதிர்பார்ப்பில் சந்தானம் நடிப்பில் கடந்த வாரம் 80ஸ் பில்டப் திரைப்படம் வெளிவந்தது.

கல்யாண் இயக்கிய இப்படத்தில் சந்தானத்துடன் இணைந்து ஆனந்த்ராஜ், கே.எஸ்.ரவிக்குமார், சுந்தர் ராஜன் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடித்திருந்தனர்.

எதிர்பார்த்த அளவிற்கு இப்படத்திற்கு மக்கள் மத்தியில் வரவேற்பது பெறவில்லை. வசூல் ரீதியாகவும் இப்படம் அவெரேஜ் தான் என திரை வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இப்படத்தில் நடிப்பதற்காக சந்தானம் வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 80ஸ் பில்டப் படத்தில் நடிப்பதற்காக ரூ.5 கோடி வரை சந்தானம் சம்பளம் வாங்கியுள்ளார் என கூறப்படுகிறது.

## மீண்டும் மோதிக்கொள்ளும் விஜய் - அஜித்

இந்த ஆண்டு துவக்கத்திலேயே விஜயின் வாரிசு மற்றும் அஜித்தின் துணிவு ஆகிய இரு திரைப்படங்களும் ஒரே நாளில் பொங்கல் ஸ்பெஷலாக வெளிவந்தது.

இதில் துணிவு முதல் நாளில் இருந்து நல்ல வரவேற்பை பெற்றது. ஆனால், வாரிசு படத்திற்கு முதல் நாள் கலவையான விமர்சனங்கள் தான் வந்தது.

அதன்பின் குடும்ப ரசிகர்களின் மத்தியில் மாபெரும் அளவில் வாரிசு படத்திற்கு வரவேற்பு கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், வாரிசு - துணிவு படங்களை தொடர்ந்து மீண்டும் விஜய் - அஜித்தின் படங்கள் ஒரே நாளில் வெளிவரவுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.




விஜயின் நடிப்பில் தற்போது உருவாகி வரும் திரைப்படம் தளபதி 68. வெங்கட் பிரபு இயக்கி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் இப்படத்தை அடுத்த ஆண்டு தீபாவளிக்கு வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளார்களாம்.

இப்படியொரு சமயத்தில் அதே நாளில் அஜித்தின் படமும் வெளிவரவுள்ளது. ஆனால், அது விடாமுயற்சி கிடையாது.

விடாமுயற்சி படத்திற்கு பின் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் நடிக்கவிருக்கும் ஏகே63 படம் தான் அடுத்த ஆண்டு தீபாவளிக்கு வெளியிட திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் மீண்டும் ஒரு முறை விஜய் - அஜித் படங்கள் ஒரே நாளில் மோதிக்கொள்ளவுள்ளது.

இதில் வெற்றி யார் பக்கம் வரப்போகிறது? அல்லது இரு படங்களும் மாபெரும் அளவில் வெற்றியடைப்போகிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## சிம்புவின் 48வது படம் குறித்து பேசிய ரஜினிகாந்த்

சிம்பு நடிப்பில் அடுத்ததாக உருவாகவுள்ள திரைப்படம் எஸ்.டி.ஆர் 48. கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் படத்தின் மூலம் வெற்றி இயக்குனராக முத்திரை பதித்த தேசிங்கு பெரியசாமி இப்படத்தை இயக்குகிறார்.

ராஜ் கமல் நிறுவனம் தயாரிப்பில் உருவாகும் இப்படத்தின் முன் தயாரிப்பு பணிகள் நடந்து வருகிறது. இப்படத்தின் கதையை முதன் முதலில் ரஜினியிடம் தான் இயக்குனர் தேசிங்கு பெரியசாமி கூறியுள்ளார்.

அவர் நிராகரித்த பின் தான் இந்த கதை சிம்புவிடம் வந்துள்ளது. கதை கேட்டவுடன் சிம்புவிற்கு பிடித்துப்போக கதையில் எந்த ஒரு மாற்றத்தையும் அவர் செய்ய சொல்லவில்லையாம்.

### வாழ்த்து தெரிவித்த ரஜினிகாந்த்

இந்நிலையில், தனக்கு கூறிய கதையில் தற்போது சிம்பு நடிப்பதை அறிந்த ரஜினிகாந்த், இயக்குனர் தேசிங்கு பெரியசாமியிடம் பேசியுள்ளார்.

சூப்பரா பண்ணுங்க, நல்லா பண்ணுங்க All The Best என கூறி வாழ்த்து தெரிவித்துள்ளார் ரஜினிகாந்த். இந்த விஷயத்தை தேசிங்கு பெரியசாமி பகிர்ந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.





## மருத்துவமனையில் இருக்கும் விஜயகாந்தின் தற்போதைய நிலை?

கடந்த 18ஆம் திகதி உடல்நல குறைவு காரணமாக பிரபல தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் விஜயகாந்த். இருமல், சலி காரணமாக அனுமதிக்கப்பட்டார் என முதலில் கூறப்பட்டது.

பின் மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில் திரு.விஜயகாந்த் அவர்களின் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.

ஆனால் கடந்த 24 மணி நேரத்தில் அவரது உடல்நிலை சீரான நிலையில் இல்லாததால், அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுகிறது.

அவர் விரைவில் பூரண உடல்நலம் பெறுவார் என்று நம்புகிறோம். அவருக்கு இன்னும் 14 நாட்கள் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது என குறிப்பிட்டு இருந்தனர். அவர் விரைவில் குணமடைந்து நலமுடன் வீடு திரும்புவார் என ரசிகர்கள் வேண்டி வருகிறார்கள்.

### பிரேமலதா வெளியிட்ட வீடியோ

இந்நிலையில், விஜயகாந்தின் மனைவி பிரேமலதா 'கேப்டன் நலமாக இருக்கிறார். விரைவில் முழு உடல் நலத்துடன் வீடு திரும்பி, நம் அனைவரையும் சந்திப்பார்' என கூறி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

## கவின் ரொம்ப பிஸி.. லாஸ்லியா கூட தினமும் பேசுவேன் – தர்ஷன்

இலங்கையை சேர்ந்த மொடல் தர்ஷன் பிக் பொஸ் தமிழில் போட்டியாளராக கலந்துகொண்டு பிரபலம் அடைந்தார்.

லொஸ்லியாவிடம் தினமும் பேசுவேன் என்றும், கவின் உடன் சமீப காலமாக பேசாமால் போக அவர் ரொம்ப பிஸியாகிவிட்டார் எனவும் கூறுகிறார்.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

28

அந்த இழப்பினை இறுதிவரை சிறிலங்கா வெளியிடாமல் மறைத்துக்கொண்டது. தாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகளின் வான்படை வெற்றிகரமாக தாயகம் திரும்பின. சிறிலங்காவிற்கு பெரும் அழிவினை ஏற்படுத்திய இந்த கரும்புலிகளில் (21) கரும்புலிகள் தமது வீர வரலாற்றை எழுதினார்கள். மறுநாள் அவர்கள் தேசிய தலைவருடன் நிற்கும் படங்கள், ஒளிப்படங்கள் வெளியிடப்படுகின்றன. வன்னி மட்டுமல்ல புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகள் எங்கும் கரும்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன.

ஆனால் இந்த தாக்குதலால் ஏற்பட்ட தோல்வியால் அவமானமும் ஆத்திரமும் அடைந்த சிறிலங்கா மிக கேவலமாக நடந்துகொண்டது. கரும்புலிகளின் ஆடைகளை களைந்து அவமானப்படுத்த முனைந்தவர்கள் தங்களைத் தாங்களே கேவலமாக்கி அவமானப்பட்டுக்கொண்டார்கள். எல்லாவற்றையும் துறந்துவிட்டு வந்த புத்தரின் மண்ணில் அவரைப்போலவே எங்கள் போராளிகளும் கிடந்தார்கள். தமிழர் மனங்களில் அவர்கள் தெய்வமாக உயர்ந்தார்கள்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் வான்படையால் சிறிலங்கா படையினர் மட்டுமல்ல வேறு சிலரும் அச்சம் கொண்டிருந்தனர் என்பது அன்று உலகம் அறிந்த உண்மை. தனியாக தாக்குதல் நடத்திவந்த வான்புலிகள் தற்போது இணைந்து தாக்குதல் நடத்துவதென்பது எதிர்காலத்தில் சிறிலங்காவிற்கு மேலும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் என்று அச்சம் கொள்ளத் தொடங்கினார்கள். இதனைக் கட்டுப்படுத்த உலக நாடுகளின் கால்களில் வீழ்ந்தது சிறிலங்கா.

வான் புலிகளை ஒடுக்க உலக நாடுகளிடம் உதவி கோரி நின்றார்கள். இந்த நிலையில் வானத்தில் இருந்து தாக்குதல் நடத்தக்கூடிய வல்லமை பொருந்திய விமானத்தினை சிறிலங்கா வான் படையினர் கொள்வனவு செய்கிறார்கள். இதில் இரவில் தாக்கும் திறன்கொண்ட தொழில்நுட்பங்களை கையாள்கிறார்கள். இந்த நிலையில் தான் வெற்றிகரமாக தாக்குதல்களை நடத்திய வான்புலிகளுக்கு தமிழீழ தேசிய தலைவர் விருது வழங்கி கௌரவித்தார். அந்த நிகழ்வு மிகவும் எழுச்சியாக நடைபெற்றது. அந்த நிகழ்வு நடைபெற்ற மறுநாள் தான் பேரிழப்பு ஒன்று வந்து சேர்ந்தது.

புலிகளின் ஒவ்வொரு தாக்குதலுக்கு பின்பும் சிறிலங்கா படையினரின் தாக்குதல் விமானங்கள் நடு இரவு நேரங்களில் கூட வன்னி வந்து விடுதலைப் புலிகளின் விமான படைத்தளம் இருப்பதாகக் கருதிய இரணைமடு பகுதியில் வெளிச்சக் குண்டுகளை வீசி ஒளி பாய்ச்சிவிட்டு தாக்குதலை நடத்திவிட்டு சென்றன. கொழும்பில் அமைச்சர்கள் இனிமேல் வான்புலிகள் வாலாட்ட முடியாது. மேலேறினால் கீழிறங்க முடியாது என எச்சரித்துக் கொண்டிருந்தனர்.

ஆனாலும் வான் படையினரின் தாக்குதலுக்கு மத்தியிலும் அமைச்சர்களின் எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு என வான் புலிகளின் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடந்துகொண்டுதான் இருந்தன. எத்தனை முறை தாக்குதல் நடத்தியும் வான்புலிகள் மேலெழுந்து வருவது சிங்கள தரப்பிற்கு மேலும் அச்சத்தை அதிகரித்தது. எங்கிருந்து வருகிறார்கள்?, எங்கே சென்று மறைகிறார்கள்? என்பதை கண்டறிந்துகொள்ள முடியாமல் மனமுடைந்து போகுமளவுக்கு சிறிலங்கா வான்படை திகழ்ந்தது. வானில் சந்தேகத்திற்கு இடமாக ஒரு குருவி பறந்தால் கூட சந்திரனைப் பார்த்து குரைத்த நாயைப் போல் படையினர் இலக்குகள் இன்றி வேட்டுக்களை தீர்த்து தள்ளினார்கள்.

ஒரு கட்டத்தில் இரணைமடுவில் தாக்குதல் நடத்துவதை விமானப் படையினர் தவிர்த்துவிட்டு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு என வேறு பகுதிகளில் வான் புலிகள் இருப்புக்களை தேடி வெளிச்சக்குண்டுகளை தேடித் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினார்கள். இதனால் பொது மக்களுக்குத் தான் இழப்புக்கள் அதிகம் ஏற்பட்டன. அத்துடன் வன்னி வான்பரப்பில் சிறிலங்கா படையின் வேவு விமானங்கள் (24) நேரமும் விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தை கண்காணித்துக் கொண்டிருந்தன.

அது வழங்கும் தகவல்களைக் கொண்டு சிறிலங்கா வான்படை இடைவிடாத தாக்குதல்களை நடத்திக்கொண்டு இருந்தது. அத்துடன் தரை வழியாகவும் தனது புலனாய்வாளர்கள் தனக்கு தகவல் தருபவர்களை கொண்டு வன்னியின் நிலைமைகளை அறிந்துகொண்டு இருந்தது. இந்த நிலையில் தான் (01.11.2007) அன்று வான்புலிகளை கௌரவிக்கும் நிகழ்வொன்றில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு வான் புலிகளுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட இந்த முக்கிய நிகழ்விற்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் அவர்களும் சென்றுவிட்டு கிளிநொச்சி தொண்டைமானாறில் உள்ள தனது முகாமிற்கு அன்றிரவே சென்று அந்த செய்தியினை ஊடகங்களுக்கு வழங்கிவிட்டு தனது செயற்பாடுகளில் ஈடுபடுகிறார். சு.ப.தமிழ்ச்செல்வனின் இந்த முகாம் (எ) வீதியிலிருந்து (100) மீற்றர் தொலைவில்தான் இருந்தது. இவரது முகாம்தான் என்பதை சிறிலங்கா ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தது. விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டுவிட்டு வந்திருந்த இவரது முகாமில் அன்று இரவு வாகன நடமாட்டங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. இதனை வானத்தில் இருந்து வேவு விமானம் படம் எடுத்துக்கொண்டிருந்தது. வாகன நடமாட்டங்களை கொண்டு அங்கு வேறும்பல முக்கியபிரமுகர்கள் இருக்கிறார்கள் என்று சிறிலங்கா வான் படை கணித்திருக்கும்.

மறுநாள் (02.11.2007) அன்று அந்த இடத்தை நோக்கி விரைந்து வந்தன. சிறிலங்கா வான் படை விமானங்கள் வருவதற்கு முன்பாகவே அந்த இடத்தை வேவு விமானங்கள் முற்றுகையிட்டிருந்தன. வழமைக்கு மாறான இந்த அதிகரித்த நடவடிக்கையால் அன்றைய பயிற்சி நடவடிக்கையை ஒத்திவைத்துவிட்டு அருகிலிருந்த முகாமில் நாங்கள் காத்துக்கொண்டிருந்த போதுதான் வேகமாக வந்த விமானங்கள் தமிழ்ச்செல்வனின் முகாமை இலக்குவைத்து காலை (6.20) குண்டுகளை வீசின. அந்த இடமெல்லாம் அதிர்ந்தது. ஒரே புகைமண்டலமாக அந்த பிரதேசம் மாறியிருந்தது. உடனடியாகவே எல்லோருக்கும் புரிந்துவிட்டது. தமிழ்ச்செல்வனின் இடத்துக்குத்தான் அடிவிழுந்துவிட்டது என்பது.

தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு வேகமாக ஓடிச்சென்றோம். அவரது பாதுகாவலர்கள் பாதுகாப்புக்குத் தோண்டியிருந்த பதுங்குகுழி முற்றுமுழுதாக மூடப்பட்டுவிட்டது. அதற்குள் இருந்தவர்கள் உயிர்தப்ப வாய்ப்பிருக்கலாம் என்று கருதி வேகமாக குழிக்குள் இருந்த மண்ணை அகற்றி மீட்கும் பணி தொடங்கியது.

கார்த்திகை மாதம் ஈரம் படித்த மண்ணை குழிக்குள் இருந்து அகற்றுவது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. இதற்கிடையில் தமிழ்ச்செல்வனின் இடத்திற்கு அடி விழுந்துவிட்டதாம் என்ற தகவல் போராளிகள், பொறுப்பாளர்கள் மத்தியில் பரவ, உடனடியாகவே தளபதிகள், பொறுப்பாளர்கள் அவ்விடத்தை விரைந்து வந்து சேர்ந்தார்கள். ஆனால் இன்னும் அவர்கள் பதுங்கு குழிக்குள் இருந்து மீட்கப்படவில்லை. மூடியிருந்த மண்ணை அகற்றுவது பெரும்பாடாக இருந்தது. பின்னர் இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு காலை 9.00 மணிக்குத்தான் பதுங்குகுழியில் இருந்த மண்ணை அகற்ற முடிந்தது.

உலகெங்கும் சமாதானம் பேச பறந்து திரிந்த வெள்ளை புறா சிறகொடிந்து அந்த குழிக்குள் விழிமூடிக் கிடந்தது. அதற்குள் அவருடன் இருந்த அனைவரும் சாவைத் தழுவியிருந்தார்கள். செல்வம் என்ற போராளிக்கு மீதமாக இன்னும் உயிர் இருப்பது தெரிந்தது. உடனடியாக அவசர சிகிச்சை வழங்கப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி அவரும் சாவைத் தழுவிக்கொள்கிறார். சமாதானத்துக்காக உலகெங்கும் திரிந்து போராடிய தமிழ்ச் செல்வனின் இழப்பு தமிழர் மனங்களில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது.

சமாதானத்திற்கு சிறிலங்கா வைத்த ஒரு முற்றுப்புள்ளியாகவே இது கருதப்பட்டது. அதுவே உண்மை என்பதை பின்னர் வந்த நாட்கள் உறுதிப்படுத்திச் சென்றன. சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் போராளிகளின் வித்துடல், தளபதி, போராளிகள், பொறுப்பாளர்கள், மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் முப்படை மதிப்புடன் விதைக்கப்படுகின்றது.

இவரது வீர வணக்க இறுதி நிகழ்வு கிளிநொச்சியில் பெருமெடுப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே சிறிலங்கா வான் படையின் வேவு விமானம் இவரது நிகழ்வு நடக்கும் இடத்தை சுற்றி வேவு எடுத்துக்கொண்டு இருந்தது. ஆனாலும் அத்தனை தளபதிகள், போராளிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு தமிழ்ச்செல்வனுக்கு இறுதி விடை கொடுத்தனர். கிபிர் விமானங்கள் இரணைமடு பகுதிகள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டு இருந்தன. சிறிலங்கா வான் படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தான் சு.ப.தமிழ்ச்செல்வனின் வித்துடல் விதைக்கப்படுகின்றது. சு.ப.தமிழ்ச்செல்வனின் சாவுக்கு போரை விரும்பியது சிறிலங்கா அரசு தான் காரணம் என சொல்லப்பட்ட காரணங்களை. இல்லை சர்வதேச நாடுகள் தான் காரணம் என அடுத்து வந்த நாட்கள் உடைத்துப் போட்டன.



தொடரும்...

கடந்தவாரத் தொடர்ச்சி...

இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் [JDS], சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் [ITJP], மனித உரிமைகள் அபிவிருத்தி மையம் [CHRD] மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் [FoD] போன்ற அமைப்புகளால் அண்மையில் "இலங்கையிலுள்ள பாரிய மனித புதைகுழிகளும், வெற்றியடையாத அகழ்வு பணிகளும்" என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் பேசு களத்தைக் கொண்டதாகக் கையளித்திருந்தார்.

இலங்கை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகள், படுகொலைகள் எண்ணிக் கையற்ற இளைஞர், யுவதிகளை மனிதப் புதைகுழிக்குள் தள்ளியது. பாடசாலை மைதானங்கள், வைத்தியசாலைகள் எனப் பல இடங்களிலும் மனிதப் புதைகுழிகளை உருவாக்கி உள்ளார்கள். 75 வருடங்களுக்குள் அவை மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போயின. ஆயினும், அவ்வாறு புதைக்கப்பட்ட வரலாறுகளை அந்த ஆன்மாக்கள் அவ்வப்போது பேசிக்கொள்வதை எந்த ஆட்சியாளராலும் தடுக்க முடியாது. மனிதப் புதைகுழிகளைக் கையாளும்போது அது தொடர்பாக இருக்கின்ற மிகப்பெரிய சாவல்களில் ஒன்று, பாரிய மனிதப் புதைகுழிக்கென சர்வதேச வரைவிலக்கணம் என்று எதுவுமே இல்லை. அல்லது குறைந்தது எத்தனை பேர் புதைக்கப்பட்டிருத்தல் அது மனிதப் புதைகுழி என்பது உட்பட சட்டரீதியான எந்தவொரு கருத்தொற்றுமையும் கூட கிடையாது.

மனிதப் புதைகுழி எனப்படுவது ஒன்றைவிட அதிகமான படுகொலை செய்யப்பட்டவர்களின் உடலங்கள் இருந்தாலே அது பாரிய மனிதப் புதைகுழிதான். இருப்பினும், 'பல மனிதர்களின் உடல் எச்சங்களைக் கொண்ட, பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று கலக்கப்பட்ட நிலையில் புதைக்கப்பட்ட அகழி, குழி, ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அத்துடன் பல்வேறுபட்ட உடல் எண்ணிக்கைகளையும் கொண்டு அவர்களை மறைப்பதற்குக் குழி தோண்டி மறைப்பு செய்யப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட இடங்களே' பாரிய மனிதப் புதைகுழிகள் என தடயவியல் வல்லுநர்கள் வரையறுத்துள்ளனர்.தமிழ் இன அழிப்பின் இனப் படுகொலைகளின் இன்னுமொரு சாட்சியம் கொண்ட ஒரு மனித உரிமை மீறல் புதைகுழி எனச் சொல்லமுடிகிறது.

மனிதப் புதைகுழிகளில் 1983ஆம் ஆண்டிலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஏதாவது ஒரு வகையில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் இலங்கையில் பல்வேறு காலப் பகுதிகளில் பாரிய மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டது. இலங்கையில் மனித புதைகுழிகள், கொலைகள் தொடர்பாக நடத்தப்பட்ட பல விசாரணைகள் பகிரங்கப்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. பல படுகொலைகள் தொடர்பான புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டும் அவை அகழப்படாமல் இருந்து வருகிறது.

இலங்கையில் கடந்த 40 வருட காலமாக அடையாளம் காணப்பட்ட சுமார் 20 மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பிலான விசாரணைகளை பௌத்த சிங்களப் பேரினவாத அரசு முன்னெடுக்கவில்லை. நான்கு தசாப்த கால பௌத்த சிங்கள பேரின வாத அரசினால் பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களே இந்த புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது.

1983ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானோரின் உடலங்களைக் கொண்ட பாரிய மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றது. இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதில் உலகளவில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை கூறுகிறது. அந்தளவிற்கு நாட்டில் நிலைமை மோசமாக உள்ளது என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதைகுழிகள் உட்பட இன்னும் பல நூற்றுக்கணக்கான மனிதப் புதைகுழிகள் காணப்பட வாய்ப்புகள் உள்ளதாக அஞ்சப்படுகிறது. அவற்றில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பல சித்திரவதைகளின் பின் படுகொலை செய்யப்பட்ட உடலங்கள் புதையுண்டிருப்பதை கடந்தகால நிகழ்வுகள் உறுதி செய்கின்றது. இந்த புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச கண்துடைப்புக்காகச் சிங்கள அரசினால் விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்களும் தனது கடமையைச் சரிவர முன்னெடுக்கவில்லை.

உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது. குடும்பங்களின் வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்கு போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை.

மனிதப் புதைகுழிகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் அதற்கான அரசியல் திடசங்கற்பம் முற்றாக இல்லை. இதுவரையில் ஆங்காங்கே மனிதப் புதைகுழிகளில் 20 மாத்திரமே அகழ்வுப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றிலும் அதிகமானவை முழுமையான அகழ்வு நடைபெறாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது இந்த குற்றங்களை ஆவணப்படுத்துவது,




ஆதாரங்களைச் சேகரிப்பது மற்றும் அதைப் பாதுகாப்பது மிகப்பெரும் சவாலான விடயமாகவே இருந்து வருகிறது.

தமிழர் தாயகத்தில் தமிழர் பூர்வீகமாக வாழ்ந்த ஈழ தேசத்து ஊரை பௌத்த சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமித்த பின்னரும், இனப்படுகொலை அரசை நம்பி நம்பிக்கையுடன் தமது சொந்த ஊர் திரும்பும் தமிழ் மக்களின் உணர்வை விவரிக்க முடியாது. 2009ம் ஆண்டிற்கு முன்னர் இலங்கை அரசின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இராணுவ சோதனைச் சுற்றிவளைப்பின் போது காணாமல் ஆக்கப்பட்டார்கள். வெள்ளை வானில் கடத்திச்சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள். அதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களின் வீடுகளில் வைத்து விசாரணை என அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். தடுப்புக்காவலின் கீழ் சித்திரவதை, ஒரு தொடர்ச்சியான சர்வாதிகாரச் செயல்முறையின் பின்னர் பெறப்பட்டிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தாங்களாகக் காணாமல் போகவில்லை. படையினரால் கைது செய்யப்பட்ட பின் காணாமல் போயுள்ளனர். பலரை உறவினர்களே படையினரிடம் நேரடியாகக் கையளித்தும் உள்ளனர். இதற்கு வலுவான சாட்சியங்களும் உண்டு. 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் மதகுருமாருடன் இராணுவத்திடம் சரணடைந்த போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள். வடக்குக் கிழக்கில் இலங்கை இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுவினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். 2009 யுத்தத்தின் போது சர்வதேசத்தையும் அதன் சட்டவிதிகளையும் நம்பிக் கையளித்த உறவுகள் 'தம்மால் கையளித்த உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன ஆனது?' என்ற பொறுப்புக்கூறலினை சர்வதேசத்திடம் கோரி இரவு, பகலாக வீதியோரத்தில் முன்னெடுத்து வரும் அறவழி சாத்வீகப் போராட்டமானது 2415 நாட்களைத் தொட்டுள்ள நிலையில் நீதி கோரி தொடர்ச்சியாகத் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேசத்தின் கவனத்தை ஏற்படுத்தும் முகமாக நீதிக்கான கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரிழந்துவிட்டார்கள். அவர்களைத் தேடித் தருமாறு அவர்களது உறவினர்கள் போராட்டம் செய்வதில் பயனில்லை' என கோட்டாபய ராஜபக்சே சனாதிபதியாக இருந்தபோது அலட்சியமாகக் கூறினார். காணாமல் போனோருக்கான அலுவலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டாலும், அதன் செயற்பாடுகள் வெற்றியளிக்கவில்லை. மாறாக, காணாமல் போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடும் மரண சான்றிதழ்களும் வழங்கப்படும் என அரசாங்கம் இந்த விவகாரத்தை மூடி மறைக்கவே பார்த்தது.

காணாமல் ஆக்கப்பட்ட, சரணடைந்த தங்கள் பிள்ளைகளை தேடும் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் எங்காவது உயிருடன் இருந்துவிடமாட்டார்களா என்ற ஏக்கத்தில் மரணிப்பதற்கு முன் அவர்களைப் பார்த்துவிடமாட்டோமா என்ற ஆசையில் 14 ஆண்டுகள் கடந்து வீதிகளிலும், அரச அலுவலகங்களிலும், மனித உரிமை ஆணைக்குழுக்களிலும், விசாரணைக் குழுக்களுக்கு முன்பாகவும் சாட்சியமளித்து வருகின்றார்கள். கடந்த நான்கு தசாப்தங்களில் சுமார் 20 - 30க்கும் மேற்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டியதில் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், அது குறித்து எந்த நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. இலங்கை அரசாங்கங்களால் நிறுவப்பட்ட பல விசாரணை ஆணைக்குழுக்கள், பாரிய புதைகுழிகள் பற்றி ஆராயக் கட்டளையிடவில்லை என்பதுடன் உண்மையை வெளிக்கொண்டுவரும் முயற்சிகளையும் கையாளவில்லை.

மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, நீதிபதிகள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதுடன், குடும்பங்களிற்கும் சட்டத்தரணிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அவற்றை உரிய முறையில் இனம் காண்பதற்கும் முழுமையான தகவல்களை வெளிக் கொண்டுவருவதற்கு, ஆவணப்படுத்தி இன அழிப்பின் சாட்சியங்களை திரட்டுவதற்கும் இடமளிக்கப்படவில்லை. உயிருள்ள சாட்சிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதுடன், பிரேதப் பரிசோதனைதரவுகள்சேகரிக்கப்படவில்லை. இதேவேளை மனித புதைகுழி தொடர்பான தரவுகளைத் தொடர்ச்சியாக அழித்துவரும் குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் பகுதியில் மட்டும் துரையப்பா விளையாட்டு அரங்கம், செம்மணி மனிதப் புதைகுழி, மிருசுவில் மனிதப் புதைகுழி என மூன்று மனிதப் புதைகுழி இடங்கள் காணப்படுகின்றன. அதேபோல் கணேசபுரம் மனிதப் புதைகுழி (கிளிநொச்சி), புதுக்குடியிருப்பு மனிதப் புதைகுழி (முல்லைத்தீவு), திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி (மன்னார்) உள்ளிட்ட பகுதிகள் தவிர, குருநாகல், கம்பஹா, கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் இந்த மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. அதேபோல் கணேசபுரம் மனிதப் புதைக்குழி (கிளிநொச்சி), புதுக்குடியிருப்பு மனிதப் புதைகுழி (முல்லைத் தீவு), திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைக்குழி (மன்னார்) உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் இனங்காணப்பட்டுள்ளது. இப் புதைகுழி பல நூற்றுக்கணக்கில் இலங்கை முழுவதும் இருக்கும். குறிப்பாக இராணுவ முகாம்கள் மற்றும் இரகசிய சித்திரவதை முகாம்கள் நிறைந்த பகுதிகளில் அதிகமானவை உள்ளன.

**தொடரும்...**

**நிலவன்**



# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும், ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



கடந்தவாரத் தொடர்ச்சி...

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக என்னைத் தான் நியமித்தார்கள். ஹிஸ்புல்லாவுக்கு மூன்று வேட்பாளர் என்றால் எனக்கும் நீங்கள் மூன்று வேட்பாளர்கள் தரவேண்டும் என நானும் சண்டை பிடித்துக்கொண்டிருந்தேன்.

2015ஆம் ஆண்டு 08 வேட்பாளர்கள் போட்டியிட்டோம். மட்டக்களப்பில் கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு என்று மூன்று தொகுதிகள் இருக்கிறது. எனக்கு மூவரைத் தந்து எனக்கு ஆதரவாக அதிகூடிய வாக்குகளைச் சேகரிப்பது என்பதுதான் எனது ஒப்பந்தம்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் எந்தக்காலத்தில் தான் கூறியதைச் செய்பவர்கள். அதற்கேற்றாற்போல பிள்ளையான் அவர்களுக்கு நான்கு வேட்பாளர்களையும், ஹிஸ்புல்லாவிற்கு மூன்று வேட்பாளர்களையும் என்னைத் தனித்துப் போட்டியிடச் சொன்னார்கள். நொமினேசன் எல்லாம் கையெழுத்திட்டு முடிந்துவிட்டது. இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் 08 பேர் வேட்பாளர்களாக இருக்கும்பொழுது சில கட்சியினர் 08 வேட்பாளர்களும் ஒரே மேடையில் இருந்தால் நல்லது என்றார்கள். அதற்கிணங்க நாம் 08 பேரும் ஒரே மேடையில் இருந்த சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் அங்கு நான் பிள்ளையானுக்காகவோ அல்லது ஹிஸ்புல்லாவுக்காகவோ வாக்குக் கேட்கப் போகவில்லை. நான் எனக்காகத் தான் வாக்குச் சேகரிக்கச் சென்றேன். இந்த விடயத்தினை வைத்துக்கொண்டு தான் சாணக்கியனும் பிள்ளையானும் ஒன்றாக வேலை செய்தவர்கள் என்று கூறுகிறார்கள். அது முற்றிலும் தவறானதொரு விடயம்.

அதில் ஒரு ஒப்பந்தம் இருந்தது. அதாவது ஆசனம் கிடைக்காவிட்டால் அதிகூடிய வாக்குகளைப் பெறும் நபருக்கு தேசியப் பட்டியலை வழங்குவது என்பது. அதில் முன்னாள் அமைச்சர் என்கிற பல காரணங்களுக்காக ஹிஸ்புல்லா அவர்கள் வந்திருந்தார். இதுதான் என்னையும் பிள்ளையான் போன்ற தரப்பினரையும் ஒன்றாக இணைத்து கதைப்பதற்கான காரணம்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலைப் பொறுத்தவரையில் நீங்கள் கூறியதைப் போல ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை. இன்னும் பல விடயங்கள் வெளியில் வந்திருக்கின்றன. தமிழர்களைக் கொன்றவர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை. லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொடவைக் கொலை செய்தவர்களுக்கும் இன்று நீதி கிடைக்கவில்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் விசாரணை நடத்தி இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

**கேள்வி : அசாத் மௌலானா அவர்களை நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா?**

பதில் : இல்லை. என்னுடைய வாழ்க்கையில் சந்தித்ததில்லை. கதைத்ததும் இல்லை. 2015 தேர்தல் காலத்தில் மாத்திரம் பிள்ளையான் அவர்களைச் சந்தித்திருக்கிறேன். பிள்ளையானுடன் நெருக்கமாக இருந்தவர்களுக்குக் கூட இவ்வாறான பாரதூரமான விடயங்களைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு விடயங்கள் பற்றி நாங்கள் பாராளுமன்றத்திற்கு வெளியில் பேசுவது பொருத்தமில்லாத விடயம். பேசுவதற்குப் பல விடயங்கள் இருக்கிறது. இன்று எப்போது நாங்கள் கைது செய்யப்படலாம் என்கிற நிலை இருக்கிறது.

விசாரணை என்று வரும்போது எங்களுக்குத் தெரிந்திருக்கின்ற விடயங்களை உரிய நபருடன் தொடர்புபடுத்தலாம். சிலர் கூறலாம் இவர் பாராளுமன்ற சிறப்புரிமை இருந்தால் மாத்திரம் தான் பேசலாம் என்று. அதற்குத் தான் பாராளுமன்றத்தில் சிறப்புரிமை வழங்குகிறார்கள். ஏனென்றால் பாரதூரமான விடயங்களை நாங்கள் பாராளுமன்றத்தில் பேசலாம். நாளை சர்வதேச விசாரணை என்று ஒன்று இங்கு வருமானால் உங்களுடைய பல கேள்விகளுக்கான உண்மைகள் வெளிவரும் என்று தான் நாங்கள் கூறுகிறோம். நீங்கள் கூறியதைப் போல 1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற விடயங்களும் விசாரிக்கப்படவேண்டும். எதுவும் விசாரிக்கப்படாமல் விடக்கூடிய விடயமல்ல.

இந்த சனல் 4 காணொளியில் முக்கியமாக கூறப்பட்ட விடயம் ஈஸ்டர் குண்டுவெடிப்பிற்கு முன்னர் இருந்தே Tripoli Platoon இயங்கியதாக அதில் கூறப்பட்டுள்ளது. இராணுவப் புலனாய்வினால் தான் இது உருவாக்கப்பட்டதாகக் கூட கூறப்படுகின்றது. இதில் தீவிரமான இஸ்லாமிய சிந்தனையுள்ள முஸ்லீம் மக்களைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

**கேள்வி : இதில் தமிழ்த் தரப்பு?**

பதில் :- தமிழ்த் தரப்பு தமிழ்த் தரப்பு என்று கூறுகின்றீர்கள். இதில் பிள்ளையானை நாங்கள் தமிழ்த் தரப்பாக கருதவில்லை. பிள்ளையானை மாத்திரம் தான் இந்த சம்பவத்தில் விரல் நீட்டப்படுகிறது. தமிழ் மக்களைக் கூட கொல்லத் தயங்காத பிள்ளையானுக்கு, ஏனைய தரப்பினரை எதுவும் செய்திருக்க மாட்டார் என்று எவ்வாறு கூறுவது.

பிள்ளையானைத் தான் நேரடியாக விரல் நீட்டிச் சொல்கிறார்கள். அவர் குற்றவாளியா அல்லது இல்லையா என்பதை சர்வதேச ரீதியிலான விசாரணை ஒன்றின் மூலம் தான் உறுதிப்படுத்தலாம். ஆனால் அசாத் மௌலானா இவர் குற்றவாளி எனக் கூறியிருக்கின்றார். அசாத் மௌலானா தமிழ்த் தரப்பினர் ஒன்றிணைந்து இதனைச் செய்ததாகவோ அல்லது இதற்குள் தொடர்பிருப்பதாகவோ கூறவில்லையே. இதனை ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரச்சினையாக மாற்றிவிட பிள்ளையான் தரப்பில் முயற்சிகள் நடக்கிறது. ஆனால் தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் மிகத் தெளிவாக இருக்கிறார்கள் இந்த சனல் 4 விவகாரம் தமிழ் மக்களுக்கு எதிராக வந்தது அல்ல. இது நேரடியாகவே பிள்ளையானுக்கு எதிராக வந்த காணொளியாகும்.

**கேள்வி : அவ்வாறாகவிருந்தால் தேர்தலிலும் பிள்ளையான் அவர்கள் வெற்றி பெறுகிறார் அல்லவா?**

பதில் : இச் செய்தி தற்போது தான் வெளியில் வந்திருக்கிறது. இனிமேல் தான் மக்களுக்குத் தெரியும். எனவே அடுத்த தேர்தலில் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மக்களது தீர்மானத்தை. நான் தீர்மானித்து கூற முடியாது அல்லவா.

**கேள்வி : அப்படியெனில் இவ்வளவு விடயங்கள் குறித்து அறிந்திருக்கின்ற அசாத் மௌலானாவும் ஒரு குற்றவாளி தானே?**

பதில் : நிச்சயமாக. அசாத் மௌலானாவும் ஒரு குற்றவாளி தான். யார் கூறியது அவர் குற்றவாளி இல்லையென. அவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. நான் நினைக்கிறேன் பிள்ளையான் அவர்களை இதிலிருந்து காப்பாற்றுவதற்கு அல்லது தப்பிப்பதற்கு மிகப்பெரிய முயற்சி ஒன்று நடக்கின்றது. அண்மையில் அவரது பாராளுமன்ற உரையினைப் பார்த்தால் பிள்ளையானைப் பாராட்டிக் கதைக்கும் சில இஸ்லாமியத் தலைவர்கள், இன்றும் பசில் ராஜபக்ஷவுடன் ஒன்றாக அமர்ந்து தேநீர் பருகும் தரப்பினர் கூட இன்று பிள்ளையானுக்கு எதிராகவும் மாறி மாறி தாக்கிக் கதைக்கின்றனர்.




**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# “மலையக” தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

*1960*களில் மலையகத்தில் நிமிர்ந்த வெகுஜன எழுச்சிக்கு இலக்கியம் முக்கிய காரணியாக இருந்தது. அந்த இலக்கிய செயற்பாட்டுத் தளம் தான் “மலையகம்” என்கிற புதிய இன அடையாளத்தையும், அதற்கொரு அரசியல் களத்தையும் ஏற்படுத்தியது. அதனைத்தொடர்ந்து இந்தியத்தமிழர், இலங்கைத் தமிழர் என்கிற பதத்துக்கு மாற்றாக இந்திய வம்சாவளியினர் தம்மை “மலையகத் தமிழர்” என்கிற பெயரை இன அடையாளத்துக்கான பெயராக அழைக்கத் தொடங்கினார்கள். காலப்போக்கில் அதை ஏனைய அரசியல் சக்திகளும் உள்வாங்கிக்கொண்டனர்.

அரச அங்கீகாரத்துக்காக இன்று இலங்கையில் சுமார் 17 லட்சம் சனத்தொகையைக் கொண்டு, இந்திய வம்சாவளியினர் ஒரு தனியானதும், நான்காவதுமான தேசிய இனமாகவும் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தனியான மொழி, கலை கலாசாரத்தையும் கொண்டு, நாடளாவிய பரந்து வாழ்ந்தாலும் மத்திய மலைநாட்டில் செறிவாக வாழ்ந்துவரும் ஒரு தனியான தேசிய இனம் என்ற உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்று கூறிக்கொள்ள எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன என்று நிச்சயமாகக் கூற முடியும்.

*2015* ஆம் ஆண்டளவில் புதிய “நல்லாட்சி” அரசாங்கம் அரச அதிகாரப் பகிர்வு வாயிலாக இனங்களின் உரிமைகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காகவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்காகவும் அரசியல் அமைப்புக்கு ஊடாக சீர்திருத்தம் மேற்கொள்வதற்கென புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு முனைந்தது. அதற்காக அரசாங்கம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரிடமிருந்தும் எழுத்து மூல ஆலோசனைகளைக் கோரியிருந்தது. பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் தமது ஆலோசனைகளை சமர்ப்பித்தன. மலையகத்தரப்பிலும்அரசியல்நிர்வாக விடயங்கள், உரிமைப் பிரச்சினைகள், கல்வி மற்றும் சுகாதாரம், காணி, வீட்டுரிமை போன்றன தொடர்பாக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அப்போது மலையக சிரேஷ்ட சட்டத்தரணி இ.தம்பையா தலைமையிலான சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஒரு கோரிக்கையை முன்வைத்தனர். “மலையகம் உள்ளடங்களாக இலங்கையின் எப்பாகத்திலும் வசிக்கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்கள் அனைவரும் மலையகத் தமிழ் மக்கள் என்ற வரைவிலக்கணத்துக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களிலும் அவர்கள் இந்தத் தலைப்பின் கீழேயே (Upcountry Tamil People) சுட்டிக் காட்டப்படவேண்டும்.” என்றனர். அதுமட்டுமன்றி இதனை ஒரு பாராளுமன்ற சட்டமாக வடிவமைத்து பாராளுமன்றில் சமர்ப்பித்து சட்ட



அங்கீகாரத்தைத் தரவேண்டும் என்றும் கோரினர்.

“மலையகத் தமிழர்” என்கிற அடையாளம் இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்களை இணைப்பதை விட “இந்தியத் தமிழர்கள்” என்கிற பதம் நிச்சயம் இணைக்கிறது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் மலையகத்தவர் என்கிற பதம் உணர்வுபூர்வமாக இணைப்பதைவிட “இந்தியவம்சாவளி” பதம் அடிப்படை விஞ்ஞானபூர்வமான யதார்த்த அடையாளத்தை உணர்வு பூர்வமாகக் கொடுக்கிறது. ஆனால் மலையகத்துக்கு வெளியில் வாழும் பலர் “இந்திய வம்சாவளி” என்கிற பதத்தைக் கைவிட்டு பல காலமாகிறது. அதைத்தொடர்ந்தும் சுமக்கத் தயாருமில்லை. இதற்கு மாற்று என்ன என்பதே கேள்வி.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் “மலையக” அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்பது மலையகத்தில் இருந்து வரும் குரல்களேயன்றி அதற்கு வெளியில் இருந்து வரும் முன்மொழிவுகள் அல்ல. மலையக அடையாளத்தை முன்மொழியும் பிரிவினர் கூட அதனைத் திணிப்பதாக கூறுகின்ற காரணங்கள் அபத்தமானவை.

எழுத்தாளர் சடகோபன் தனது கட்டுரையொன்றில் கூறும்போது, “மலையகத் தமிழர்கள் முதலில் வந்து கால்பதித்த இடம் “கண்டிச் சீமை” என்ற மலையகம் தான். அங்குதான் அவர்கள் கடந்த *200* வருடங்களாக செறிந்து வாழ்கிறார்கள். மலையகம் என்பது இவர்களது தாயகம். அதன் பின்னரே தத்தமது வேலைகளின் நிமித்தம் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றார்கள். எனவே வேறு பிரதேசங்களில் வாழ்பவர்கள் கூட தம்மை மலையகத்துடன் இணைத்துக் கொள்ள முடியும்.”

இதனை ஒரு தர்க்கத்துக்கு எடுத்துக்கொண்டால் கூட இந்திய வம்சாவளியினர் முதலில் வந்தது கண்டிக்கல்ல. அவர்கள் கொழும்பு பாதை அமைப்பதற்காக கொண்டுவரப்பட்டது பெருந்தோட்டத்துறை தொடங்குவதற்கும் முன்னராகும். மேலும் மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் அனைவரும் வேலையின் நிமித்தம் வேறு இடங்களுக்குச் சென்றவர்கள் என்று கூறுவது அடுத்த அபத்தம். மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினரின் வருகை, பூர்வீகம், வாழ்வியல், வழித்தடம் பற்றிய வெகுஜன அறியாமைக்கு அரசியல் தலைமைகள் மட்டுமல்ல இத்தகைய எழுத்தாளர்களும், இலக்கியவாதிகளும் கூட ஒரு வகையில் காரணம்.

மேலும் சடகோபன் கூறுகிறார்.

“...இதில் முக்கியமானது என்னவென்றால் இது ஒரு புவியியல் ரீதியான கோட்பாடு அல்ல. இது ஒரு அரசியல் ரீதியான கோட்பாடு அல்லது எண்ணக்கருத்தாகக் கருதப்படவேண்டும். மலையகத்தில் வாழாத வடக்கு கிழக்கு, வவுனியா, மன்னார், முந்தல், குருணாகல், களுத்துறை, மாத்தறை போன்ற பிரதேசங்களில் வாழ்பவர்கள் கூட மலையகத்தை தமது வேர் (ROOT) பிரதேசமாக அங்கீகரித்து இதில் இணைந்துகொள்ள முன்வர வேண்டும்...” என்கிறார்.

சிலவேளை மலையகத்திலிருந்து வேலை நிமித்தம் இடம்பெயர்ந்தவர்களும், சில வேளை கலவரங்களின் போது இடம்பெயர்ந்தவர்களைக் கூட அவர் கூறுகிற எண்ணக்கருவுக்கு பொருந்தலாம். ஆனால் நூற்றாண்டுக்கும் முன்னர் இலங்கைக்கு வேலையின் நிமித்தம் வரும் போதே இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் குடியமர்ந்துவிட்ட மலையகத்துடன் தொடர்பற்ற மக்களுக்கு எந்தளவு பொருந்தும் என்பதை சிந்திக்கத்தயாரற்றவர்களாக உள்ளார்கள்.

சடகோபன் வெறும் உதாரணம் தான். இலங்கை - இந்திய வம்சாவளியினரின் பன்முக வழித்தோன்றலையும், பன்முக வழித்தடத்தையும், பன்முக அடையாளச் சிக்கல்களையும், பன்முகத் தேவைகளையும், பன்முக அபிலாசைகளையும் கட்டுடைத்துப் பார்க்கத் தவறுவதன் விளைவு தான் இவை. இலங்கையில் பெரும்பான்மைவாதத்துக்கு அகப்பட்ட நசுங்கிப்போன மக்களில் நாமும் முக்கிய அங்கம் தான். அப்படி இருக்கையில் சிறுபான்மைக்குள்ளும் சிறுபான்மையாக ஆகியிருக்கும் இன்னோர் பிரிவினரிடம் பெரும்பான்மைவாதத்தைப் பிரயோகிப்பது என்ன தார்மீகம். அவர்களின் அபிலாசைகளை அறிய இதுவரை இவர்கள் மேற்கொண்ட அக்கறை தான் என்ன? பிரக்ஞை தான் என்ன?

உலகெங்கும் கொண்டு செல்லப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் அந்தந்த நாடுகளில் அந்தந்த நாட்டுப் பெயர்களை அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்படுகின்றனர். மலேசிய தமிழர், சிங்கப்பூர் தமிழர், மொரீசியஸ் தமிழர் அல்லது மலேசிய இந்தியர், சிங்கப்பூர் இந்தியர் என்றோ, தென்னாபிரிக்க இந்தியர் என்றோ இன்றும் அழைக்கப்படுகின்றனர் என்பதையும் கவனத்திற் கொள்க.

பெருந்தோட்டங்களுக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் இலங்கைக்கு இந்தியாவில் இருந்து கூலித் தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்டபோது பெருந்தோட்டத்துறை ஆரம்பிக்கப்படாத காலகட்டம். ஆரம்பத்தில் வந்த இந்திய வம்சாவளியினர் மத்திய மலைநாட்டுக்கு வெளியில் பல்வேறு தொழில்களுக்காக வந்தார்கள் தான். ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து பெருவாரியான தமிழர்கள் கட்டுமானப் பணிகளுக்காக கொண்டுவரப்பட்டார்கள். குறிப்பாக நாடளாவிய ரீதியில் கட்டுமானப் பணிகளுக்காக அவர்கள் கொண்டு வரப்பட்டார்கள். பாதைகளை அமைத்தல், பாதைகளை செப்பனிடுதல், மலைகளைக் குடைந்து பாதைகளையும், குகைகளையும் அமைத்தல் மட்டுமன்றி இலங்கையின் பல பிரதேசங்களில் உள்ள அரச காலத்தில் கட்டப்பட்ட பழமை வாய்ந்த குளங்களை மீள் கட்டுமானம் செய்வதற்கும் இவர்கள் கொண்டுவரப்பட்டார்கள். வன்னியில் இவ்வாறு குடியேற்றப்பட்டவர்களின் சந்ததியினர் இன்றும் உள்ளனர். இலங்கைக்கு இந்திய வம்சாவளியினரின் முதல் வருகை பெருந்தோட்டத்துறைக்காக அல்ல. மத்திய மலைநாட்டுக்கும் அல்ல. *1823*இலும் அல்ல. மாறாக முதல் வருகை பாதை செப்பனிடுவதற்காக *1817* இல் கொண்டு வரப்பட்டார்கள். அதன் பின் மேற்படி கட்டுமானத் தொழில்களுக்காக கொண்டு வரப்பட்டார்கள். அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்கள் மத்திய மலைநாட்டில் தங்கவைக்கப்படவும் இல்லை. மாறாக அவர்கள் பணிபுரிந்த பிரதேசங்களிலேயே குடியிருத்தப்பட்டார்கள்.

பிற்காலத்தில் இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகள் விஸ்தரிக்கப்பட்டபோது, நகரசுத்தித் தொழிலுக்காக தமிழகத்திலிருந்து ஏராளமான அருந்ததியர்கள் கொண்டுவரப்பட்டு இலங்கையின் நாடளாவிய ரீதியில் சகல நகரங்களிலும் மோசமான சேரிக் குடியிருப்புகளில் குடியிருத்தப்பட்டு வேலைவாங்கப்பட்டார்கள். இன்றும் இலங்கையில் சகல நகரங்களிலும் இவர்கள் நூற்றாண்டாக நகரசுத்தித் தொழிலால குடியிருப்புகளில் வாழ்ந்து வருகிறார்கள். அதுமட்டுமன்றி கொழும்பு துறைமுகத்தை ஆங்கிலேயர்கள் விரிவாக்கியபோது ஆயிரக்கணக்கான தமிழர்களும், மலையாளிகளும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டார்கள். குறிப்பாக கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை உள்ளிட்ட கொழும்பு வடக்கு பகுதியில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் இவர்கள் தான்.

தமிழ் கூலிகள் சியனே கோறளையைத் (Siyane Korale) தவிர (குறைந்தளவினரே இருந்த பிரதேசம்) நாட்டின் சகல பிரதேசங்களிலும் பெருகினார்கள். *1911*இல் மேல் மாகாணம், தென் மாகாணம், வட மேல் மாகாணம் ஆகியவற்றில் மாத்திரம் மொத்த பெருந்தோட்ட மக்களில் சுமார் *10* வீதத்தினர் இருப்பதாக அந்த அறிக்கை புள்ளிவிபரம் வெளியிட்டிருக்கிறது. அதாவது பெருந்தோட்டத்துறையைச் சாராதவர்கள் நாடு முழுவதும் மலையகத்துக்கு வெளியில் இன்னொரு பெரும் எண்ணிக்கையைக் கொண்டிருப்பார்கள் என்பதையும் அறிதல் வேண்டும்.

தொடரும்...

**- என்.சரவணன் -**

# விளையாட்டுச் செய்திகள்

## டிசம்பரில் இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழு விவகாரம்




கிரிக்கெட் இடைக்கால கட்டுப்பாட்டு குழுவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆராயப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் இடைக்கால குழுவை நியமித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எதிர்வரும் நீதிமன்ற திகதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேன்முறையீட்டு நீதிமன்றில் உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும்5ஆம் திகதி குறித்த விடயம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை முன்வைக்குமாறு புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## விபத்தில் சிக்கியவரைக் காப்பற்றிய வீரர்

இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி விபத்தில் சிக்கிய நபர் ஒருவரின் உயிரைக் காப்பாற்றிய வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் மலைப் பகுதியில் விபத்தில் சிக்கிய நபர் ஒருவரை காரில் இருந்து மீட்டுள்ளார். முகமது ஷமி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், சாலையில் விபத்தில் சிக்கிய நபருக்கு ஷமி உதவி செய்துள்ளார்.

நைனிடால் மலைப்பகுதியில் ஷமியின் வாகனத்திற்கு முன்னால் கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. திடீரென வழியில் இருந்து விலகிய அந்த கார் பள்ளத்தில் கவிழ்ந்தது. இதனால் பதறிப்போன ஷமி மற்றும் சிலர் விரைந்து சென்று காரில் இருந்த நபரை வெளியே கொண்டு வந்துள்ளனர். குறித்த நபர் இதனால்



உயிர்தப்பியுள்ளார்.

தனது வீடியோவில் ஷமி, 'அந்த நபர் அதிர்ஷ்டசாலி. கடவுள் அவருக்கு இரண்டாவது முறையாக வாழ்க்கையை கொடுத்திருக்கிறார். நைனிடால் அருகே, மலைப்பகுதியில் சென்றுகொண்டிருந்த கார் திடீரென பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. நாங்கள் அவரை பாதுகாப்பாக மீட்டு வெளியே கொண்டு வந்தோம்' என குறிப்பிட்டுள்ளார்.

## பானுக ராஜபக்சவை விடுவித்த பஞ்சாப் கிங்ஸ்



பஞ்சாப் கிங்ஸ் அணி 2024ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் தொடரில் இலங்கையின் பானுக ராஜபக்ச உட்பட 5 பேரை விடுவித்துள்ளது. 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஐபிஎல் கிரிக்கெட் தொடருக்கான ஏலத்திற்கு முன்பாக ஒவ்வொரு அணியும் தங்கள் வீரர்களை தக்கவைப்பது, விடுவிப்பது ஆகிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

துபாயில் 2024ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் தொடரின் ஏலம் 19ஆம் திகதி தொடங்குகிறது. கடந்த ஆண்டியின் ஒரு அணியின் பட்ஜெட் ரூ.95 கோடியாக இருந்த நிலையில், தற்போது ஒரு அணியின் பட்ஜெட் ரூ.100 கோடியாக உயர்ந்துள்ளது.

இது ஒவ்வொரு வீரருக்கும் மூன்று வருட ஒப்பந்தத்தின் மூன்றாவது மற்றும் இறுதி ஆண்டாகும், அடுத்த ஆண்டு ஒரு மெகா ஏலம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் பஞ்சாப் கிங்ஸ் அணி தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்கள் குறித்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இலங்கை துடுப்பாட்ட வீரர் பானுக ராஜபக்ச (Bhanuka Rajapaksa) விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருடன் மோஹித் ரதீ, ராஜ் பவா, ஷாருக் கான், பால்தேஜ் சிங் ஆகியோரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய வீரர்கள் அனைவரும் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டில் பஞ்சாப் அணிக்காக 50 லட்சத்திற்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட பானுக ராஜபக்ச 9 போட்டிகளில் 206 ஓட்டங்கள் எடுத்தார். ஆனால் கடந்த சீசனில் 4 போட்டிகளில் மட்டுமே விளையாடி அவர் 71 ஓட்டங்கள் எடுத்தார். இதில் ஒரு அரைசதம் அடங்கும்.

## வெளிநாட்டு தொடர்களில் பங்கேற்கும் இலங்கை அணியின் அட்டவணை



இலங்கை கிரிக்கெட் அணி 2024ஆம் ஆண்டில் விளையாட உள்ள போட்டிகள் குறித்த அட்டவணை வெளியானது. உலகக்கோப்பை தொடரில் மோசமான ஆட்டத்திற்கு பின் இலங்கை அணி கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டது. அதனைத் தொடர்ந்து வாரியத்தின் நடவடிக்கையில் அரசு தலையிட்டதால் ஐசிசியின் தடை விதிப்பிற்கு இலங்கை ஆளானது.

மேலும், U19 உலகக்கோப்பையை நடத்தும் வாய்ப்பு இலங்கையிடம் இருந்து தென் ஆபிரிக்காவுக்கு சென்றது. இந்த நிலையில் 2024ஆம் ஆண்டில் இலங்கை அணி 52 போட்டிகளில் விளையாட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 10 டெஸ்ட், 21 ஒருநாள் மற்றும் 21 டி20 போட்டிகள் அடங்கும்.

**5 வெளிநாட்டு தொடர்கள்**

2024ஆம் ஆண்டில் தனது முதல் தொடராக ஜிம்பாப்வேயை எதிர்கொள்கிறது இலங்கை. ஜனவரியில் 3 ஒருநாள், 3 டி20 போட்டிகளில் இரு அணிகளும் மோதுகின்றன. சொந்த மண்ணில் ஜிம்பாப்வே அணியை இலங்கை எதிர் கொள்வதால் வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் இலங்கை அணி 5 வெளிநாட்டு தொடர்களில் பங்கேற்கிறது. இதற்கான அட்டவணையை இலங்கை கிரிக்கெட் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் வங்கதேசத்திற்கு பயணம் மேற்கொள்ளும் இலங்கை, உலகக்கோப்பை டி20 தொடருக்காக ஜூன் மாதம் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் செல்கிறது. அதன் பின்னர் ஓகஸ்ட் மாதத்தில் இங்கிலாந்துக்கும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் முறையே தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து நாடுகளுக்கு சென்று இலங்கை அணி விளையாடுகிறது. அதேபோல் சொந்த மண்ணில் ஜிம்பாப்பே, ஆப்கானிஸ்தான், இந்தியா, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து ஆகிய அணிகளை எதிர்கொள்கிறது.

## ரொனால்டோவின் உற்சாக பதிவு



பெர்செபொலிஸ் அணிக்கு எதிரான போட்டி டிராவில் முடிந்ததைத் தொடர்ந்து, அல் நஸர் அணி தங்கள் குழுவில் முதல் இடம் பிடித்துள்ளது. அல் நஸர் - பெர்செபொலிஸ் மோதல் ரியாத் நகரின் Al-Awwal Park மைதானத்தில் நடந்த AFC சாம்பியன்ஷிப் லீக் போட்டியில் அல் நஸர் (Al - Nassr) மற்றும் பெர்செபொலிஸ் (Persepolis) மோதின.

பரபரப்பாக தொடங்கிய இந்தப் போட்டியில் இரு அணி வீரர்களும் கடுமையாக போட்டி போட்டனர். குறிப்பாக அல் நஸ ரின் ரொனால்டோவை (Ronaldo) கட்டம் கட்டிய பெர்செபொலிஸ் வீரர்கள், அவரை கோல் அடிக்க விடாமல் தடுத்தனர். முதல் பாதியில் கோல்கள் விழவில்லை. ஆனால் இரண்டாம் பாதியிலும் அல் நஸரின் கோல் முயற்சிக்கு பெர்செபொலிஸ் முட்டுக்கட்டைப் போட்டது.

அதேபோல் அல் நஸர் வீரர்களும் மிரட்டலாக செயல்பட்டு பெர்செபொலிஸ் வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். 57வது நிமிடத்தில் ரொனால்டோ அடித்த ஷொட் நூலிழையில் கோலாக மாற தவறியது. பின்னர் 78வது நிமிடத்தில் அவர் வெளியேறி மாற்று வீரர் களமிறங்கினார். இரு அணி வீரர்களும் கடைசி வரை போராடியும் ஒரு கோல் கூட விழாததால் ஆட்டம் டிராவில் முடிந்தது. ஆனாலும், புள்ளிப்பட்டியலில் அல் நஸர் அணி 13 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்தது.

பதிவிட்ட ரொனால்டோ, 'எங்கள் குழுவில் நாங்கள் முதல் இடத்தைப் பிடித்ததில் மகிழ்ச்சி அடைகிறோம் மற்றும் 20 ஆட்டங்களில் தோல்வி அடையாமல் சாதித்துள்ளோம். இது சிறப்பான குழுப்பணி' என பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

# உலக வலம்

## யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னம் இடிப்பு



யுனெஸ்கோவின் நிர்வாக குழுவிற்கு துணைத்தலைவராக பாகிஸ்தான் தேர்வு செய்யப்பட்ட போதிலும், கோயில்களை இடிக்கும் அந்நாட்டின் போக்கு மாறவில்லை. பாகிஸ்தானில் யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட இடத்தின் சுற்றுச்சுவர் மற்றும் கோயில் ஒன்றும் இடிக்கப்பட்டதற்கு அங்கு வசிக்கும் ஹிந்துக்கள் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

பாகிஸ்தானில், சிறுபான்மையினராக உள்ள ஹிந்துக்களுக்கு எதிராக அட்டூழியங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஹிந்துக்களின் கோயில்களை சேதப்படுத்துவது, அவமரியாதை செய்வது, ஹிந்து மத சிறுமியை கடத்தி சென்று மதம் மாற்றி திருமணம் செய்து வைப்பது போன்ற நிகழ்வுகள் அங்கு சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது.

இது குறித்து புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவது கிடையாது. இதனால், அந்நாட்டில் ஹிந்துக்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். யுனெஸ்கோவின் நிர்வாக்குழுவின் துணைத்தலைவராக சமீபத்தில் பாகிஸ்தான் தேர்வானது. இருப்பினும், இதற்கு பிறகும் ஹிந்து கோயில்கள் குறிப்பாக யுனெஸ்கோவின் பட்டியலில் இடம்பெற்றுள்ள கோயில்களும் இடிக்கப்பட்டு உள்ளன. சிந்து மாகாணத்தின் தர்பார்கர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஹிங்லாஜ் மாதா மந்தீர் என்ற ஹிந்து கோயிலை அதிகாரிகள் பொக்லைன் இயந்திரம் மூலம் இடித்து தள்ளினர். நீதிமன்ற உத்தரவுப்படி இடித்தோம் என காரணம் கூறியுள்ளனர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் யுனெஸ்கோ அமைப்பால் பாதுகாக்கப்பட்ட இடம் என அறிவிக்கப்பட்ட இடத்தையும் பாகிஸ்தான் அதிகாரிகள் இடித்துள்ளனர். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதி அருகே அமைந்துள்ள சாரதா பீடத்தின் சுற்றுச்சுவரும் இடிக்கப்பட்டது. இதற்கு அருகிலேயே, பாகிஸ்தான் ராணுவத்திற்கு என "காபி ஹவுஸ்" கட்டப்பட உள்ளதாக தெரிகிறது. இந்த இரு நிகழ்வுகளும் ஹிந்துக்கள் மத்தியில் கோபத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது.

## பாலஸ்தீனியர்களை எச்சரித்த இஸ்ரேல்

போர் வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை வடக்கு காசாவிற்குச் செல்ல வேண்டாம் என இஸ்ரேலியப் படைகள் எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு எல்லையில் இருந்து ஒரு கிலோமீற்றருக்குள் செல்லவும் கடலுக்குள் நுழையவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலியப் படைகள் அறிவித்துள்ளன.

## வைரஸ் தொற்று தொடர்பில் WHO விளக்கம்

வைரஸ்களால் பாதிக் கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் வைரஸ் தொற்று தயார்நிலை தடுப்புப் பிரிவின் தற்காலிக பணிப்பாளர் டொக்டர் மரியா வேன் கெர்கோவே தெரிவித்துள்ளார்.

தற்போது சீனாவில் சுவாச நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இருப்பினும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கொவிட் – 19 நெருக்கடி நிலையின் போது ஏற்பட்டதைப் போன்று மோசமானதல்ல என உலக சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளது.




மேலும் புதிய வழக்கத்துக்கு மாறான வைரஸ்கள் கண்டுப்பிடிக்கப்படவில்லை என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவாச நோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களில் பெரும்பாலானோர் சளிக்காய்ச்சலால் நோய்வாய்ப் பட்டிருப்பதாக சீனாவின் சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது.

## வெடித்துச் சிதறியது இத்தாலி எரிமலை

உலகப் புகழ்பெற்ற இத்தாலியின் மவுண்ட் எட்னா எரிமலை வெடித்துச் சிதறி தீ குழம்பை கக்கி வருகிறது.

இதன் காரணமாக பனி போர்த்திய எட்னா எரிமலையில் சூடான நெருப்புக் குழம்பு ஆறாக பெருகி ஓடுகிறது.

ரோம் நகரில் இருந்து 500 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிசிலி தீவில் எட்னா எரிமலை அமைந்துள்ளது.



அதேவேளை கடல் மட்டத்தில் இருந்து 3,330 மீட்டர் உயரம் கொண்ட எட்னா எரிமலை அடிக்கடி வெடித்துச் சிதறுவது வழக்கம்.

மேலும் எரிமலை வெடிப்பினால் வரும் சாம்பல் மத்திய தரைக்கடல் பகுதி தீவில் கரை சேர்வது வாடிக்கையான சம்பவம் ஆகும்.

## கனேடியர்கள் அதிருப்தி



வெளிநாட்டுப் பிரஜைகள் நாட்டுக்குள் வருவதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாக பெரும்பான்மையான கனேடியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குடியேறிகளின் எண்ணிக்கை உயர்வானது, வீட்டுப் பிரச்சினை உக்கிரமடையச் செய்துள்ளது என கனேடியர்கள் தெரிவித்துள்ளனர். முன்னணி நிறுவனமொன்று மேற்கொண்ட கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. நாட்டுக்குள் கூடுதலாக குடியேறிகள் வருவதனால் வீடுகள் மற்றும் சுகாதார நலன்கள் என்பன தொடர்பில் பிரச்சினை ஏற்படுவதாகத் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குடியேறிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு நாட்டின் கல்வித்துறையிலும் பாதக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், குடியேறிகளின் வருகையானது ஆளணி வளத்தை அதிகரிக்கும் எனவும், இதன் மூலம் வரி வருமானங்களை அதிகரித்துக்கொள்ள முடியும் என கருத்துக் கணிப்பில் பங்கேற்ற மற்றுமொரு தரப்பினர் தெரிவித்துள்ளார்.

## வட கொரியாவில் முடி உதிர்தல் தொற்றுநோய்



வட கொரியாவில் மக்கள் பயன்படுத்தும் சோப்பு மற்றும் சலவை சோப்புகளில் அதிகளவு ரசாயனங்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன், தனது வாழ்க்கை முறையால் அடிக்கடி செய்திகளில் இடம்பிடிப்பவர்.

தற்போது, கிம் ஜாங் உன்னுக்கு பதிலாக வடகொரியா மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அதுதான் முடி உதிர்தல் ஆகும். வட கொரிய மக்களின் தலைமுடி வேகமாக உதிர்வதாகவும், அதனால் அவர்களின் தலை சீக்கிரமே வழுக்கையாகிவிடும் என்ற அபாயம் உள்ளது.

நியூயோர்க் போஸ்ட் அறிக்கையின்படி, முடி உதிர்தல் தொற்றுநோய் வட கொரியாவில் வேகமாக பரவுகிறது என்று தென் கொரிய நிபுணர்கள் கூறுகின்றனர். இதற்கு காரணம் வட கொரியாவில் பயன்படுத்தப்படும் சோப்பு மற்றும் சலவை சோப்புகள் என்று நிபுணர்கள் குற்றம் சாட்டினர்.

மேலும் வட கொரியாவில் ராணுவம் தொடர்பாக கடுமையான விதிமுறை உள்ளது. அனைத்து உடல் திறன் கொண்ட ஆண்களும் பொதுவாக ஆயுதப்படையில் 10 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். பெரும்பாலான ஆண்கள் ராணுவத்தில் பணிபுரிந்து வருவதால், அவர்களுக்கு தலைமுடி உதிர்வு பிரச்சினை அதிகமாக உள்ளது. தற்போது வட கொரியாவில் மட்டுமன்றி தென் கொரியாவிலும் திடீரென முடி உதிர்வது அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

## சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்களும் மீட்பு

உத்தரகாண்ட் – உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா மலைப் பகுதியில் 4.50 கிலோமீட்டர் தூரத்துக்கு மலைக்கு கீழ் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடந்து வந்தது. கடந்த 12 ஆம் திகதி நடந்த சுரங்கப்பாதை விபத்தில் தொழிலாளர்கள் 41 பேர் சிக்கிக் கொண்டனர்.

தொடர்ந்து கடந்த (28) 17 ஆவது நாளாக மீட்புப் பணி நடைபெற்றது. எனினும் தொழிலாளர்களை மீட்க துளையிடும் பணி நிறைவடைந்த நிலையில், அவர்களது உறவினர்கள் சுரங்கத்தில் குவிந்தனர். இதற்கிடையே, ஒவ்வொரு தொழிலாளராக பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட



தொழிலாளர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில்

# ஊடக அடக்குமுறைக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம்

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறைகளும், அவர்களை அச்சுறுத்தி பழிவாங்கும் செயற்பாடுகளும் அரச இயந்திரங்களான பொலிசாராலும், இராணுவம் மற்றும் புலனாய்வு துறையினராலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக வடக்கு-கிழக்கில் ஊடகவியலாளர்கள் தொடர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே, ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் சனிக்கிழமை (02.12) காலை 10 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்பட்ட குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.







வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயத்தில் கடந்த 30.11.2023 அன்று காலை 8.00 மணிக்கு, பளுதூக்கல் போட்டியில் மாகாண மற்றும் தேசிய ரீதியாக சாதனை படைத்த மாணவிகளை மற்றும் இவர்களின் பயிற்றுவிப்பாளரை கௌரவிக்கும் முகமாக, "சாதனையாளர் கௌரவிப்பு விழா - 2023" பாடசாலையின் முதல்வர் திரு.சி.வரதராஜா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.





இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 03.12.2023 அன்று வெளியிடப்பட்டது.